OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 OCT 1911
MADRAS.

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII. Madras: August 1911. No-8.
புத்தகம் - ௧௩. சென்னப்பட்டணம்: ஆகஸ்டு 1911. இலக்கம்-8.

சீனாவிலுள்ள பெரிய மதில்.

சீனாதேசம் ஆசியாகண்டத்தி லிருக்கிறது. இத்தேசத்து ஜனங்களுக்கு சீனர்களென்றுபெயர். இதற்குசக்ரவர்த்தியுண்டு. இவர் இப்பொழுது தமது நாட்டை விருத்திசெய்ய முயன்று வருகிறார். கைத்தொழில், கல்வி, ரயில், முதலியவைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஏரிகளில் மிகப் பெரியது ஒன்று உண்டு. அது 220 மைல் சுற்றளவுள்ளது. இங்கு இரண்டு பெரிய நதிகளுண்டு. யாங்க்டிஸி நதி ஆழமானது. இதில் கப்பல்கள் போய்க்கொண்டிருக்கின்றன. பர்வதங்களுமுண்டு. கோடைகாலத்தில் உஷ்ணம் பொறுக்க முடியாது. நமது தேசத்தில் புசல் காற்று அடிப்பதுபோல் அங்கும் சிற்சில சமயங்களில் டைபூன் என்னும் கொடுமையான சுழல் காற்று அடிக்கும். வடக்கு பாகத்தில் குளிர் மிகுதி. இங்குள்ள பீய்கோ நதி வருஷத்தில் மூன்று மாதம் பனியால் உறைந்திருக்கும். இங்கு ஒருவித களிமண் அதிகமாய் அகப்படுகின்றன. இம்மண்ணால் பீங்கான் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. நிலக்கரி சுரங்கங்களிருக்கின்றன. நெல்லு, கோதுமை, தினை, சோளம், பயிராகின்றன. முசுக்கட்டைச் செடி அதிகம். பட்டுப்பூச்சிகளு மதிகம். இவைகளுக்கு இந்தச்செடியின் இலைகள் ஆகாரமாக உதவுகிறது. ஆகையால் தான் இங்கு பட்டு வஸ்திரங்கள் அதிகம் நெய்யப்படுகின்றன. மிருகங்கள் அதிகமில்லை. ஆடுமாடுகள் சிறியவைகளா யிருக்கின்றன. குள்ள வாத்துக்களு முண்டு. இவைகளை அநேகர் வளர்க்கிறார்கள். "சூரிய அஸ்தமன வேளையில் இவைகளை எஜமானன் கூப்பிட்டால் அவைகள் யாவும் மேய்ச்சலை விட்டோடி வந்து தங்களுக்கு வைத்திருக்கும் அந்தி உணவைத் தின்றுபோம்" என்று, சீனம் சீனருடைய சித்திரப்படச் சரிதைகள் என்ற புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது அத்தேசத்தைப்பற்றி விவரித்துச் சொல்லும் நூல். இதன் விலை அணா-2½. சென்னை சி. எல். எஸ். புஸ்தகசாலை என்று எழுதவேண்டும்.

கிறிஸ்து பிறக்க 214 வருஷங்களுக்குமுன் ஷீ ஹுவாங் தி என்பவர் வடபாகத்திலிருந்து ஜனங்கள் வந்து தமது தேசததிற்குத் தொந்திரவொன்றும் செய்யாமலிருக்க ஒரு பெரிய மதிலைக் கட்டிவைத்தார். இதன் நீளம்

1255 மைல். முதலில் இரண்டு பெரிய சுவர்களாக செங்கல்லால் கட்டப்பட்டு இவைகளுக்கு மத்தியில் கற்களும், மண்ணும் நிரப்பப்பட்டனவா[illegible] அடியில் 25 அடி அகலமும் உச்சியில் 15 அடியுமாக யிருக்கிறது. இத[illegible] உயரம் 15 அடியிலிருந்து 30 அடி வரையிலிருக்கிறது. உச்சியில் செங்க[illegible]லால் மூடப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் புற்கள் ஏராளமாய் வளர்ந்தி[illegible]க்கின்றதாம். இந்த மதிலை ஐரோப்பிய கனவான்கள் போய் பார்த்துவரு[illegible]றார்களாம். இதன் சித்திரப்படம் இப்பத்திரிகையில் அமைக்கப்பட்டிரு[illegible] கிறது. அடுத்த பத்திரிகையில் சீனர்களுடைய சிற்சில வழக்கங்களைப் பற்[illegible] எழுதுவோம். சித்திரப்படமும் வெளிவரும்.

☞ பத்திராதிபர்.

ஜயதேவி.

(வது பக்கத்தொடர்ச்சி.)

ஜயதேவியும், ஜெய்பாலும் தமது சிறு சேனையுடன் துரிதமாக மரங்களடர்ந்த சோலைக்குப் போய் சிறிது நேரம் அங்கு தங்கியிருந்து போஜனமுண்டு தாம்பூலம் தரித்துக்கொண்டு புறப்பட சித்தமாயிருந்தார்கள். உடனே வண்டிகளுக்கு மாடுகளைக்கட்டி எல்லாரும் வண்டிகளில் உட்கார்ந்துகொண்டு ஜெஸ்ஸல்மீர் என்ற ஊருக்கு வண்டிகளை ஓட்டும்படி திட்டம் செய்தார்கள். வழியில் யாதொரு தொந்திரவின்றி சௌக்யமாக எல்லாரும் ஜெஸ்ஸல்மீருக்கு வந்துசேரவே, ஜெய்பால் ஜயதேவியை அவளுடைய நெருங்கிய பந்துக்களிலொருவர் வீட்டில்விட்டுவிட்டு தான் டெல்லிமாநகருக்குப்போகத் தீர்மானஞ் செய்துகொண்டான்.

இச்சங்கதி ஜயதேவிக்குத் தெரிந்தவுடன் திகிலடைந்து “தாங்கள் என் விரோதிகளிருக்கும் பட்டணத்திற்குப் போகவேண்டும்?” என்று துக்க முகத்துடன் கேட்டாள்.

“உனது தகப்பனுர் கைதியாய் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறாரல்லவா? அவரை மீட்க உனக்கு இஷ்டமில்லையா” வென்று ஜெய்பால் கேட்டான்.

“ஆம், தாங்கள் சொல்வது உண்மைதான்; எனக்கு இஷ்ட முண்டு; ஆனல் தாங்கள் மாத்திரம் தனிமையாக விரோதிகளால் சூழப்பட்ட என் தகப்பனுரை எப்படி சிறைச்சாலையிலிருந்து விடுவிக்க முடியும்? அவர்களோ கண் கொட்டாமல் பகலிலும் இரவிலும் அவரிடத்திலேயே யிருக்கிறார்களே” என்றாள்.

“நான் தனிமையாகத்தான் பார்க்கவேண்டியிருக்கிறது. ஆயினும் காலபலம் எப்படி யிருக்கிறதோ தெரியாது. ஒருவேளை நற்காலமாயிருந்தால் நான் நினைத்திருக்கும் காரியம் கைகூடும்; நான் உன்னை மணம்புரிந்து நாமிருவரும் சுகமாக யிருக்கவேண்டுமென்பது உனக்கு நன்றாகத் தெரியும்; கூடிய சீக்கிரத்தில் நன்மை விளைவதைப் பார்ப்பாய்” என்றான்.

"அபாயத்தை முன்னிட்டுக் கொண்டு தைரியச்செயல் செய்யப்போக லாமா" என்றாள்.

"அவ்விதகாரியம்ராஜபுத்திரர்களுக்குரியதல்லவா? உன்தகப்பனைவிடு விக்கமுயலுவதில் நான் தயங்கினுல் உனக்கு நான் அருகனல்லவே" என்றான்.

"தைரியவானுயிருந்தபோதிலும் அபாயங்களிருக்கும்பொழுது அவை களை நோக்கி செல்லக்கூடாது. இது தான் புத்தியின் விசேஷம்" என்றாள்.

"ஒருவன் கடமையைவிட புத்திபெரிதல்ல. அது தானதர்மத்திற்குச் சமமானது" என்றான்.

"அப்படியானுல் ஜெய்பால்! போய் வாருங்கள். தங்கள் தரும கடமை க்கு விரோதமாக நான் தடைசெய்ய வரவில்லை. என்னை மறந்து போகாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு என்னை கூடிய சீக்கிரத்தில் விவாகம் செய்து கொள்ளுங்கள்" என்றாள்.

"எனக்கு அபாயம் நேரிடும்பக்ஷத்தில் நீ இப்பொழுது சொன்ன வார்த் தைகள் இரக்ஷாபந்தனம்போல என்னைக் காப்பாற்றும்; இதற்குத் தடை யில்லை. நல்ல மனைவியும் கணவனும் சுகித்து வாழ்வது அவர்கள் செய்யும் நற்காரியங்களால்தான், அது தவறினுல் மனுஷன் சுபாவம் தப்பினவனே. நான் சீக்கிரம் திரும்பி வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஜெய்பால் டெல் லிக்குப் புறப்பட்டான்.

நிற்க, ஜயதேவி சேனையிலிருந்து விடுவிக்கப்பட்ட சங்கதி அலாவுதீன் காதில் விழுந்தவுடன் அவனுக்குண்டான கோபத்திற் களவே யில்லை. கன் னம் சிவந்தது. மீசை துடித்தது. பற்களை ஒரு தடவை கடித்தான். ஆ! ஆ! விட்டேனே. செழிப்பான ராஜபுதனத்தின்மேல் படையெடுக்க நிச்ச யித்து விட்டான். சிலநேரம் சென்றபின் கோபம் தணியவே அவள் தகப் பன் கைதியாகத்தானே யிங்கிருக்கிறுன். நமக்கென்ன பயம்! அவள் எப் படியும் நமக்கு மனைவியாவாள். அவள் மகாரூபவதி என்பதைக் கேட்டிருக் கின்றமையால் அவளை எப்படியாவது அடையவேண்டுமென்று நினைத் தான். இவ்விதம் நினைத்து அவள் தகப்பனைக் கடுமையாகச் சிறையில் வை த்து இம்சிக்காமல் விருந்தாளியை உபசரிப்பதுபோல் நடத்திவந்தான்.

இவ்விதம் சிலநாள் சென்ற பிறகு ஒருநாள் ராய் ரத்தமசிங்கை அர சன் வரவழைத்தான். ரத்தம்சிங் உத்திரவு பிரகாரம் வந்து இவ்வரசனுக்கு முன் நின்றார்.

"சாந்தமாக ராஜா! தாங்கள் சுயேச்சையாக யிருக்க விரும்புகிறீரல்ல வா" வென்று அலாவுதீன் கேட்டான்.

"சுயேச்சையாகப்பிறந்த ஒவ்வொரு மனிதனும் சிறையிலிருக்கவிரும்ப மாட்டான். யுத்தத்தின் பலன் தங்கள் கைதியானதுதான். ஆனுல் தயாள குணமோ அரசன் செங்கோலுக்கு ஒரு பளபளப்பான ரத்னம்" என்றார்.

"எவன் அருகனே அவனிடத்தில் தான் ராஜாக்கள் தயாளகுணத்தைக் காண்பிக்கவேண்டும். அருகனில்லாதவனிடத்தில் அப்படிச்செய்வது தரும மாகாது. ஆகையால் தாரதம்மியமின்றி தயாளகுணத்தைக் காண்பிப்பது கெடுதல் தான்".

"ராஜனே, இது போலி நியாயம், தர்மம் ஒருபொழுதும் கெடுதலா காது. நாம் அதை எப்படியும் செய்யலாம், பொய்வேஷம் முகமாகுமா? தரு மமாயிருப்பதுபோல் பாசாங்கு செய்வதும் அம்மாதிரியே, நான் இவைகளை நம்ப மாட்டேன்".

"சரி, இவைகளிருக்கட்டும் ஒரு மூலையில். தங்களை வரவழைத்த காரியத்தைப்பற்றி பேசுவோம், தங்களுக்கு விடுதலை யடையவிருப்பமா" வென்றார்.

"ஆம், கரும்பு திங்கக்கூலியா"

"அப்படியல்ல, என்ன கொடுப்பீர்?"

"ராஜபுத்திரனுடைய கௌரவ ஹானியில்லாத எதைக் கேட்டாலும் கொடுக்க சித்தமாயிருக்கிறேன்."

"உமக்கு ஒரு புத்திரி உண்டல்லவா?

நல்லது! அப்புறம்.

"அவளை அர்த்தநாரி ஆக்கிக்கொள்ள விரும்புகிறேன்."

"சொல்லுங்கள் இன்னும்"

"அவளை வரவழைத்துக்கொடும், உம்மை இப்பொழுதே விடுதலைசெய்கிறேன்."

"இதுவே ராஜாக்களின் தயாள குணமாகயிருந்தால், இது தர்மமல்ல, அது தர்மமாகயிருக்கவேண்டுமானால் அதை அலக்ஷியம் பண்ணவேண்டும். இக்காரியம் கௌரவமுள்ளதல்ல, தகப்பன் தன்பெண்ணை இவ்விதம்கொடுக்க விரும்புவானா?"

"தங்களுக்கு இது சம்மதமில்லாவிடில் சுயேச்சையாகயிருக்க மறுதளிகிறீர்கள்போல் தோன்றுகிறதே."

"ஆமாம், வேறு எதையாவது சொல்லும்; அதுமனச்சாக்ஷிக்குவிரோதமாகயிருக்கக்கூடாது."

சரி, அப்படியா, ஏ, சேவகா! இவரை சிறைச்சாலையில் அடைத்துவிடு. உடனே இதைச்செய் என்று கண்டிப்பாய் உத்திரவளித்தார்.

ரத்தம்சிங் ராஜன் காராகிரகத்தில் அடைக்கப்பட்டார். முன்னிருந்த சௌகரியங்கள் இப்பொழுது சிறிதுமில்லை. இவர் தனிமையாகயிருக்க வேண்டியிருந்தது. இவ்விதமிருந்து வருந்துவதைவிட மரணமடைவது நலமென்று எண்ணுவார்கள் ராஜபுத்திரர்கள். ஆனால் இவர் அவ்விதம் எண்ணவில்லை. ஏனெனில் இவர் எப்பொழுதும் கஷ்டத்தைச்சிறிதும் அநுபவிக்காமல் ராஜசுகத்திலேயேயிருந்தவர். ஆயினும் தனிமையாகயிருக்க மனமொப்பவில்லை. என்னசெய்வது? மிக்க துக்கித்தார். தனது புத்திரியிடத்தில் அதிக வாஞ்சையுண்டு. ஆயினும் புத்திரியைவிட தன்சுகத்தை அதிகமாக விரும்பினார். "தான் இங்கு இவ்விதமிருப்பதிலிருந்து எப்படியாவது விடுதலை அடையவேண்டும். விடுதலை அடையவேண்டுமானால் நமது புத்திரியை அலாவுதீனுக்கு மணம்புரிந்து வைக்கவேண்டுமே! அவர் சில தினங்களுக்குமுன் நம்மை அழைப்பித்தபோது அவ்விதம் செய்விக்க உடன்படவில்லையே! புத்திரியோ என்னைக் காப்பாற்றும் மார்க்கத்தைத்தேட வேண்டியவள். இதுதான் புத்திரியின் சரியான கடமையாகும். இப்படி இருவருக்கும் விவாகம் நடந்தால் எனது ஸ்திதியும் உயரும். இதா இராஜாக்களும் எனக்குக்கீழ்ப்படிந்து நடப்பார்களே! நான் ஏன் முன சம்மதிக்கவில்லை? இது என் புத்திக்குறைவைக் காண்பிக்கின்றதல்லவா? மேலும் அவசரப்பட்டேன். இப்பொழுது அவ்விதம் எனது பத்திரியை அலாவுதீனுக்கு மணம்புரிவிக்க சம்மதித்ததாகத் தெரிவித்து நான் விடுதலையடைகிறேன்" என்று வெகுநேரம் இரவில் யோசித்து கடைசியாக அயர்ந்து நித்திரைபோனார்.

ஜெய்பால் டெல்லிக்குவந்து சேர்ந்தான். உடனே ரத்தம்சிங்கைப் பார்க்கமுயன்றான். இது சுலபமான காரியமா? இதை உத்தேசித்து வியாபாரி வேஷம் தரித்துக்கொண்டு ஊரைச்சுற்றி வந்தான். ரத்தம் சிங்கைப்பற்றி விசாரித்தான். தனிமையாக காராகிருகத்தில் இவன் அடைபட்டிருப்பதைக் கேட்டு விசனமுற்றான். ஜயிலுக்குள்ளேபோக வழியைக் கண்டுபிடிக்க ஜயிலண்டை சென்றான். சிலநிமிஷம் அங்கு தங்கியபின், ஜயில் அதிகாரியைக் கூப்பிட்டு "ஐயா! ரத்தம்சிங் ஒருநகையை விற்க யோசித்திருக்கிறார். அது சுமார் லக்ஷம் ரூ. விலையுள்ளது. நான் இவ்வூர் வியாபாரி. அதை நான் வாங்கினால் உமக்கு 100-க்கு 10 ரூ. வீதம் கமிஷன் கொடுக்கிறேன். என்னை எப்படியாவது அவரைப் பார்க்கும்படி உள்ளேவிடும். கூடிய சீக்கிரத்தில் இக்காரியத்தை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன். உமக்கும் நல்ல லாபம் கிடைக்கு"மென்றான். சாதாரணமாய்'பிணமும் பணமென்றால் வாயைத்திறக்கும்' என்ற பழமொழிபோல் இவர் லாபத்தைவிரும்பி மறுநாள் காலையில் உள்ளே விடுவதாக வாக்களித்தார். ஜெய்பால் மனமகிழ்ந்து விடைபெற்று தனது இருப்பிடத்திற்குச் சென்றான்.

மறுநாள் வியாபாரியாகிய ஜெய்பால் கையில் பணம் எடுத்துக்கொண்டு ஜெயிலுக்குப்போனான். ஜெயிலதிகாரி பண ஆசைமேலிட்டு வியாபாரியை மரியாதையுடன் உள்ளேவிட்டு சீக்கிரம் திரும்பிவரும்படி வேண்டிக்கொண்டான். ஜெய்பால் உள்ளே போனபோது அது ஒரு சிறிய அறையாகயிருந்தது. இதன் நாலுபக்கங்களிலும் கல் சுவர்களிருந்தன. இரும்பு சட்டங்களும் சுற்றிலும் போடப்பட்டிருந்தன. ஒருசிறிய பலகணி மாத்திரமிருந்தமையால் இது இருட்டாக இருந்தது. ஜெய்பால் ரத்தம்சிங் மனவருத்தத்தால் முழுகியிருந்ததைக்கண்டு மனம் வருந்திநின்றான். ரத்தம் சிங் திடீரென்று "நீ அரசனிடத்திலிருந்து வந்தாயா,' வெனக்கேட்டான்.

''ஐயா! மெதுவாக!, நான் ஜெய்பால்'' என்று மறுமொழி பகர்ந்தான்.

"ஜெய்பால்! இவ்விடத்திற்கு நீ எப்படி வந்தாய்?"

"நாம் இருவரும் பேச சாவகாசம் அதிகமில்லை; ஆகையால் சீக்கிரத்தில் பேசி முடிப்போம். நான் தாங்கள் ஒருநகையை விலைக்கு விற்க எண்ணியிருப்பதாகவும், அதை நான் வாங்க வந்திருக்கிறேனென்றும், நான் ஒரு வியாபாரியென்றும், ஜெயிலதிகாரி என்னை உள்ளே விடும்பட்சத்தில் அவனுக்கு தக்கமரியாதை செய்வதாகவும்'' சொல்லிவந்திருக்கிறேன். தங்களை எவ்விதமாக விடுவிக்க முடியுமென்பதையும், அரசன் உமதுமீது கோபங்கொண்டிருப்பதற்குரிய காரணத்தையும் தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்."

"அரசனுக்கு என் அருமைக் குமாரத்தியை மனைவியாகச்செய்வித்தால் என்னை விட்டுவிடுவதாக அரசன் சிலதினங்களுக்குமுன் என்னை வரவழைத்துச் சொன்னார். நான் அதற்கு கர்வத்துடன் சம்மதிக்கவில்லை."

"சரி, பழிக்குப் பழிவாங்கவேண்டியது தான்."

"எப்படி செய்யமுடியும்''?

''இங்கு வீணுககாலம் கழிக்க நான்வரவில்லை. உங்களைக் கைதிசெய்தமையால் அவனுக்கு மரணம் சமீபித்துவிட்டது.''

"நீயோ சிறுபிள்ளை, உனக்குச் சேனைகளில்லை. நீ எப்படி பெருத்த சேனைகளுள்ள இவ்வரசனை வெல்லமுடியும்?"

"ஒருமனிதன் ஹிருதயத்தைத் துளைக்க ஒரு அம்புபோதாதா? அவ்வளவு பெருத்த சேனையின் பலமிருந்தாலென்ன?"

"உன்னிஷ்டப்படிசெய், அதைப்பற்றி எனக்கு அதிக கவலை என்னத்திற்கு? நீயோ பிடிவாதமாய் என்னை விடுதலைசெய்விக்கப் போவதாகச்சொல்லுகிறாய், இது முடியாவிடின் என் புத்திரி இவ்வரசனுக்கு மனைவியாகவேண்டியது தான்."

"ஒருக்காலும் அதுமுடியாத காரியம்."

இவர்கள் அதிகநேரம் பேசிக்கொண்டிருப்பதைப்பார்த்து சந்தேகித்து, வியாபாரத்தைப்பற்றி இவ்விருவர்களும் பேசவில்லை. ஏதோ வேறு விஷயத்தைப்பற்றி பேசுகிறார்கள் என்று தீர்மானித்து ஜெப்பால் சமீபம்போய், "பேச்சை நிறுத்திவிட்டு வெளியில்போ, நாழிகை அதிகமாயிற்று; அரசனுக்குத்தெரிந்தால் என் தலைபோய்விடும்" என்றான். ஜெப்பால் உடனே மறுபேச்சு பேசாமல் வெளியில் வந்து பின்வருமாறு மனதில் நினைத்துவருந்தினான். "ஐயோ! எனது பிரியமுள்ள ஜயாவை மகமதிய அரசனுக்கு கொடுக்கலாமென்றாரே! மேலும் அவருக்கு ஜெயிலிலிருப்பது அருவெறுப்பாயிருக்கிறது. எப்படியிருப்பினும் நம்மாலானமட்டும் ஜெயாவை நாமே மணந்து இல்வாழ்க்கையை சுகமாக நடத்தவேண்டு என்று எண்ணியிருந்தோமே."

இனி இதைப்பற்றி சிந்தனை செய்துகொண்டே யிருப்பது சரியல்லவென்று நினைத்து பட்டணத்துக்கு வெளியில் சென்று ஒருகாட்டில் நுழைந்தான். இங்கு இராஜன் வேட்டையாடவந்தால் ஒருவேளை நம்காரியம் கைகூடுமென்று நினைத்தான்.

அலாவுதீன் ஒருநாள் வேட்டையாட அக்காட்டிற்குத் தமது பரிவாரங்களுடன் சென்றான். ஜெப்பாலுக்கு இச்சங்கதி தெரியவே, அதிக சந்தோஷங்கொண்டு சமயம் பார்த்துக்கொண்டு ஒளிந்திருந்தான். அலாவுதீன் பல மிருகங்களைக்கொன்று மூன்றுதினம் வேட்டை ஆடினான். கடைசிதினம் சிவிங்கியைத்துரத்தி சுட ஆரம்பிக்கும்பொழுது அது வெகுதூரம் ஓடிப்போய்விட்டது. இவனும் தனது பரிவாரங்களை விட்டுப்பிரிந்து அதைப் பின்தொடர்ந்து சென்றான். கடைசியாக அச்சிவிங்கி தப்பி இவன் கண்ணுக்கெட்டாத தூரத்தில் ஓடிவிட்டது. அச்சமயத்தில் சிலவேடர்கள் வெகு திறமையுடன் வேட்டையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு அதிசயித்து அவர்களது சாமர்த்தியத்தைக் கண்டு மகிழ்ந்துகொண் டிருந்தான்; அங்கொரு மேடை யிருந்தது; அதற்குச் சமீபத்தில் தன் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு இவன் அம்மேடையின் மீது படுத்துக்கொண்டு வேட்டையை பார்த்துக்கொண் டிருந்தான். இளைப்பு மேலிட்டு சிறிதுநேரம் நித்திரை செய்ய ஆரம்பித்தான். உடனே இவனது சரீரத்தில ஒரு அம்பு திடீரென்று பாய்ந்தது. இரத்தம் ப்ரவாகமாக ஓடிற்று, நோவுமதிகரித்தது. இவன் அங்கு என்ன செய்வான்? இவன் வேதனையால் துடித்துக் கொண்டு ப்ரக்ஞையற்றிருக்கும் தருவாயில் அக்காட்டுக் கருகிலுள்ள சில வேடர்கள் இவன் அவஸ்தைப் படுவதைக் கண்டு அம்பை பலமாக தேகத்திநின்று

பிடுங்கி எடுத்துவிட்டு, அவர்களுக்குத் தெரிந்த சில காட்டு மூலிகைகளை எடுத்துப் பிசைந்து காயத்தில் வைத்து கட்டினார்கள். இரத்தம் உடனே வருவது நின்றுவிட்டது; பின்பு அவர்கள் இவ்வரசனை தங்கள் குடிசைக்கு மெதுவாக இட்டுக் கொண்டுபோய் அவன் காயம் ஆறும்வரையில் வைத்து போஷித்து வந்தார்கள்.

அரசனும் தான் இன்னானென்று அவர்களுக்குச் சொல்லவில்லை. ஒருவேளை தான் அலாவுதீன் என்று சொல்லிவிட்டால், அந்த ராஜதுரோகி இவர்கள் மூலமாய் தன் னிருப்பிடத்தை அறிந்துகொண்டு இங்குவந்து தனக்கு கெடுதல் செய்யக்கூடும் என்று நினைத்தான். இந்த வேடர்கள் படிப்பில்லாத ஏழைகளாயிருந்தபோதிலும் அரசனை வெகு மரியாதையாக நடத்திவந்ததும் தவிர, தங்களா லியன்றமட்டும் நல்ல உணவை சேகரித்து கொடுத்து வந்தார்கள்.

அரசன் திரும்பி வராததைப் பரிவாரங்கள் கண்டு ஒன்றும் தோன்றாமல் தங்கள் பட்டணத்திற்குத் திரும்பிப்போனார்கள். தங்கள் அரசன் இறந்ததாகவே பாவித்து துக்கங் கொண்டாடினார்கள். ஒருமாத மானபின்பும் அரசன் சங்கதியொன்றும் தெரியாமையால் இவனது பந்துக்களிலொருவனாகிய ருக்கன்சன் என்பவனை அரசனாக்கினார்கள். இவன் பொல்லாதவன், நன்றியற்றவன். அலாவுதீன் தலையைக்கொண்டு வருபவனுக்கு அதிக திரவியம் வெகுமதிகொடுப்பதாகவிளம்பரம் செய்வித்தான். ஏனெனில்அலாவுதீன் உயிருடனிருந்தால்திரும்பிவந்துவிடுவனேஎன்கிறபயத்தால்இவ்விதகெட்டசெய்கையைச் செய்யத்துணிந்தான். இச்சங்கதி யாவருக்கும் தெரியவே "இவனை ஏன் நாம் அரசனாக்கினோம்" என்று விசனமுற்று இவனை எவ் விதத்திலாவது தொலைக்க வழியைத் தேடினார்கள். அல்பனுக்கு ஐஸ்வரியம் வந்தால் அர்த்த ராத்திரியில் கொடை பிடிப்பான் என்பதுபோல இவன் தனக்கு ராஜகன்னியை விவாகம் புரிந்துகொள்ள வேண்டுமென்றும், பெரிய ஒரு புதிய அரமனையைக் கட்டவேண்டுமென்றும் மந்திரியிடத்தில் சொன்னான். அலாவுதீனுடைய நெருங்கிய இதர பந்துக்களை வெறுத்தும் உத்தியோகஸ்தர்களை அகௌரவமாக நடத்தியும் வந்தான்.

இது இப்படியிருக்க, அலாவுதீன் தெய்வானுகூலத்தால் பூராவாக சௌக்யமடைந்தான். வேடர்களும் மிகவும்மகிழ்ந்து "ஐயா, தங்களை தங்களூருக்கு இட்டுக்கொண்டு போகிறோ"மென்றார்கள். சரி, என் குதிரைஎங்கே? அதைக் கொண்டு வாருங்கள் என்றான். அவர்கள் குதிரையைக் கொண்டுவந்ததும் அலாவுதீன் அதைத் தட்டி தன் குரலைக் காண்பிக்கவே, அதுவும் சந்தோஷத்தால் கனைத்தது. நீங்கள் இவ்வளவு காலம் மிக்க அன்புடன் என்னைக் காப்பாற்றியதற்காக நான் உங்களுக்கு வந்தன மளிக்கிறேன். நீங்கள் என் ஊருக்குவரவேண்டாம். நான்போய் என் பந்துக்கள் யாவரையும் பார்த்துவிட்டு உங்களுக்கு வெகுமதி எதாவதுகொண்டுவந்து கொடுக்கிறேன் என்றான். அவர்கள் வெகுமதி ஒன்றும் வேண்டாம் என்றுசொல்லி அரசனுடன் வந்தார்கள். காட்டைக்கடந்து ஒரு கிராமத்திற்குள் வந்ததும் அக்கிராமத்து ஜனங்களெல்லாம் கும்பலாய் ஓடிவந்து அரசனுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச்செய்து அரசனுடன் வந்தார்கள். இப்படி ஒவ்வொரு கிராமத்து ஜனங்களும் வரவே அரசனுக்கு பலமதிகரித்தது. இச்சங்கதி ருக்கன்

சனுக்குத் தெரிந்தது. சேனைகளுக்குச் அலாவுதீனை எதிர்க்கும்படி சொல்லிப் பார்த்தான். சேனைகள் கேட்காததைக்கண்டு மாறுவேடம் போட்டுக்கொண்டு ஆப்கன்பூருக்கு ஓடிப்போய்விட்டான். அலாவுதீன் தன் பட்டணத்திற்கு வந்து மறுபடியும் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தான். வேடர்களுக்கு திரளாக திரவியம் கொடுத்தனுப்பினான்.

ருக்கன்சனைப் பின்தொடர்ந்து அவனைப்பிடித்துவரும்படி 100 பேர் அடங்கிய ஒரு துருப்பை அனுப்பினான். அவர்கள் அவனைப் பிடித்து வரவே, அவனைத் தூக்கிலிட்டுக் கொன்றான்.

சில தினம் சென்ற பின், அலாவுதீன் ரத்தம்சிங் ராஜனை வரவழைத்து "உமக்கு இன்னும் உமது குமாரத்தியை எனக்கு விவாகம் செய்துவைக்க மனமில்லையா" வென்று கேட்டான்.

அரசனே ! எனக்கு இஷ்டம்தான்.

"ஆனால், நீங்களும் மகமதியராய்விட்டால் மிக நலமாயிருக்கும்".

"என்மதக்கொள்கையை விட்டு உங்களதைப்பற்றிக்கொள்ள எனக்கு மனம் வரவில்லை."

"சரி, உம்மிஷ்டப்படியே யிரும். உமக்கு ஒருராஜ்யம் அளிக்கின்றேன். அதற்கு ராஜாவாக சுயர்ச்சியாக யிருக்கலாம்; 60 தினத்திற்குள் உமது பெண்ணை இங்கு வரவழைக்கவேண்டும், இல்லாவிடின் உமது தலைபோய் விடும்" என்றான்.

"40 தினத்திற்குள் என் பெண்ணை இங்கு வரவழைக்கிறேன். அவள் என் வார்த்தையைத் தட்டமாட்டாள். உம்மை மணம்புரிந்து கொள்ளும் படியும் செய்விக்கிறேன்!!" என்று சொன்னான் ரத்தம்சிங்.

உடனே அலாவுதீன் ரத்தம்சிங்கை மரியாதையாக வேறொருயிடத்தில் வைத்து நல்ல உணவும் அளித்து வரும்படி கட்டளை யிட்டுவிட்டு அரமனைக்குச் சென்றான்.

ஜேய்பால் அலாவுதீன் இறந்தானென்று தீர்மானம் செய்துகொண்டு ஜயதேவி யிருக்கு மிடத்திற்குச் சென்றான்.

☞ தாதா.

வைகறைத்துயிலெழு.

"வைகறையாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக—என்பதே
முந்தையோர் கண்ட முறை."

நமது மூதாதைகள் நமக்காகச் சேமித்து வைத்துப்போன அறிவுத் திரட்டிலெல்லாம்வெகுமுக்கியமானது பரிசுத்தநிலையின் அருமையையும்பெருமையையும் பற்றிய அறிவே மனத்தூய்மையைப்போலவே தேகத்தூய்மையையும் மிகவும் புகழ்ந்து பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள். இத்தூய்மைகளிரண்டும் மிக்கு நெருங்கிய சம்பந்த முடையவைகளென்பதும், இவைகள் மனோசலனங் குறைவுபட்டு இரம்மியம் மனதிற் குடிகொள்ளுந்தோறுமெவருக்குஞ் சித்திக்கக்கூடியதென்பதுவுமே, நம் நூல்கள் அனைத்தும் முறையிடுகின்ற உண்மை. மனத்தெளிவும் தேகமனோசுகங்களைப் பொருத்தது. ஆதலின் இவைகளைப் பயக்கக்கூடிய வழிகளே மிக்க மேம்பாடுடையன. எவராலும் ஓம்பத்தக்கன. இவ்வழிகள் அநேக முளவேயாயினும், அவற்றுட் பொருட்செலவும் சிரத்தைச்செலவும் எதுவும் இல்லாமல் நமக்குத் துணைபுரியக்கூடிய சாதனமாய் வைகறையிற் றுயிலை விட்டெழுதலையாவது நாம் கைக்கொள்ளல் வேண்டும்.

சரீர சுகத்திற்கு நித்திரை இன்றியமையாதது. நித்திரையும் தேகநிலைமையையும் காலநிலைமையையும் பொருத்தது. பகலிற் றூங்குதல் வியாதிக்கிடமாகும். நித்திரையுஞ் சலனப்படும். இரவு உறக்கத்தையுந் துறக்கச்செய்யும். அஃதேபோல் இரவில் ஆகாரமுட்கொண்டு ஒருமணிநேரத்திற்கெல்லாம் தானே கண்ணிமைகள் கனத்து மூடுவதையும், மனம் தன்னையறியாமலே அயர்வதையும் நாம் பன்முறையும் நம் அனுபவத்திற் கண்டிருக்கலாம். அதுவே சரியான காலமென வூகித்தறியவேண்டும். தேகமே இயற்கையின் ஒரு பாகமாகையால், இயற்கையானது தூண்டுமாறே நாம் அதனை இயக்குதல்வேண்டும். காலை நிலங்கீறும் வேளை வரவே, தானே தூக்கம் அகல, மனது கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னைப் பிணித்திருந்த நித்திரைக்கட்டு நெகிழத், தலைகாட்டிச் சுவதந்திரம்பெற ஆரம்பிக்கினறது. அதுவே நித்திரைக்காலம்போய் விழிப்புக்காலம் வந்துவிட்டதென்பதற்கோர் பெரிய அறிகுறி. அநேகர்—பொதுவாய் வேலையற்ற சோம்பேறிகள்—இத்தருணத்தினையோர்ந்தும் ஓராதார்போல் திறக்குங் கட்க பாடங்களை இறுகமூடி, மனதைத் தானே தெளிவாகுங் காலத்தில் தெளிவுசெய்து கொள்ளாது, தம் சித்தந் தூண்டுமாறு, தம் படுக்கையில் அங்கு மிங்கும் புரண்டும், தம்முளத்தில் தலையும் வாலுமில்லாத பல காரியங்களை அறைகுறையாய் நினைவுப்படுத்திப் பின் சடுதியில் மறந்தும், சோம்பலென்னும் விஷத்தேனை மாந்தித் தேக்கிச் சுகமடைய எத்தனிக்கின்றார்கள். அந்தோ! மனமானது சதாவும் எதையாயினும் பற்றியே யிருக்குந்தன்மைத் தாதலால், ஒன்றையுஞ் செவ்வனே பற்றவொட்டாது. அதனை உழலச்செய்து, நாளடைவில் அம்மனத்தின் தீவிரத்தைக்கெடுத்துத் தம் தலையில் இங்ஙனம் மண்ணை வாரித் தாமே போட்டுக்கொள்ளுகிற விந்தைதானென்னே! காலையின் இரம்மியத்தையும், அது அளி

க்கவல்ல மனோரதத்தையும் இவர்கள் சற்றேனும் அனுபவித்துச் சுகத்தை ஒருக்காலாயினும் பெற்றிருப்பரேல், இவர் இங்ஙனஞ் செய்யவும் ஒருப்படுவரோ?

"புத்தியதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்த நரம்பினற் றாய்மையுறும்—பித்தொழியுஞ்
தாலவழி வாதபித்தம் தத்தம் நிலைமன்றும்—அதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்."

என்னும் ஆன்றோர் வாக்கும அனுபவ வாக்கன்றோ?

அடாடா! காலைப்பொழுதின் பெருமையை எங்ஙனம் உறைத்தல் கூடும்! எங்கும் நிசப்தம். எங்கு மோங்காரம். பொங்கிடுங் கடலும் வாய் மூடும். புஷ்பமுஞ் சற்றே விரிவுறும். நறுமணந்தூக்கும். தென்றலும்—இளந் தென்றலும்—செவ்விதின், மந்தகாசமாய் வீசும். ஆகா! என்ன நற்காக்ஷி! எத்தனை உடுக்கள் இருப்பதும் மறைவதும்! ஏது இச்செவ்வான்! பக்ஷிகள் மெல்லத் தொனி செய்யும். பாடும் பறக்கும். ஆக்கள் கறையும். அகிலமும் விழித்தது................அந்தோ! இத்துணைப் பெருமை சாலுங் காலைப் பொழுதினைத் தேடியானந்தியாவர் ஜென்மமும் பாழேயாகும். மாந்தருட் குழந்தைப்பருவம் போன்று, இது பொழுதிற் குழந்தைப்பருவமன்றோ! இனிமையுஞ் சுகமும், இன்பமுங் கனிந்து, தாமே சுரக்குஞ் சமையம். களங்கமே யற்றுத் தீயவெண்பரப்பினை யொத்துக், கண்டதைக் கேட்டதைக் கவரும் வான்திறமை வாய்ந்து செறிவுறும் மனமும். ஐயோ! இதனையோ மறப்பது! இதனையோ ஒழிப்பது! மடமைதானென்னே!

இச்சுக மாத்திரமன்று. சாஸ்திரரீதியாக நோக்கினும் இக்காலையிலெழுதல் மிக்கு நன்மையைப் பயக்குமென்பதில் ஐயமில்லை ஜீரணக் கருவிகள் சுத்தியாதலும், இரத்த வோட்டங் கூடுதலும், மலஜலம் வெளிவந்து தேகஞ் சுகமடைதலும், நேத்திரங்கள் மூடியிருந்தன திறந்து மீண்டுங் குறையக் குறைய வெளிச்சத்திற் பழகுதலும், குரலினினிமை வாய்ந்தோடுதலும், வியர்வை ஒழிதலும்—இவ்வரிய காலைப் பொழுதிலேயேயன்றோ! விகாரமே தலையெடுக்காத வண்ணம், எதையும் இன்புறச்செய்யும் இவ்வேளையிலன்றோ—பாடகர் பழகுவதும், மாணவர் மனனஞ் செய்வதும்—பயன்பெறும்!

இவைகளை யெல்லாம் மறந்து நித்திராதேவியை விடிந்தும் வருந்தியழைத்து அவளுக்கடிமைத் தொழில்புரியும் மாந்தரின் செயலை என்னென்று சொல்லலாம. காலவிரயமுஞ் செய்கின்றனரே. வாழ்நாளை வீண் நாளாக்கி மயங்குகின்றார்களே. அனுதினமும் காலை 7-மணிக்கு எழுந்திருப்பதற்குப் பதிலாக 5-மணிக்கு எழுவதாகக் கணக்கிட்டுப் பார்த்தாலும், வாழ்நாளானது ஆறிலொருபங்கு கூடுமென்பது தெரியவரும். மேலும் பகல் முழுவதிலும், பல அவகாசக் குறைவுகளோடும், பல அசந்தர்ப்பங்கள் மத்தியிலும் தொடங்கி முடிக்க இயலாத ஒரு கருமத்தை இவ்வதிகாலைப்பொழுதில்—எவ்வளவு சுருக்கத்திலும் எளிதிலும்—செய்து முடிக்கலாம்!

இவைகளை யறிந்துமோ, அறியாமலோ அநேகர் பெருந்தூக்கமென்னும் வியாதியிற் சிக்குண்டு நாளடைவில் நசிந்து கெடுகிறார்கள். இது மிகவும் பரிதபிக்கத்தக்கதேயாகும். அன்னோர்கள் இனியேனும் இயன்றவரை இத்துர் வழக்கத்தை ஒழிக்க முயல்வதே அறிவிற் கடுத்த விஷயம்.

"வருந்தினுல் வராததொன்று மில்லை."

இன்னும் ஒருவிஷயமுண்டு. அதாவது, இவ்வெற்றி பொருவருக்கு இலகுவிற் சித்திக்கவேண்டுமானுல், சில தினங்களுக்கு, நன்கு பழகும்வரையாகிலும், மிக்கக் காற்ருேட்டமும் எவ்விதப் பக்க மறைவும் இல்லாததான இடத்தில், மிருதுவென்ற பெயருமறியாத சரசரப்புள்ள படுக்கை விரித்து, நித்திரைசெய்து வரவேண்டுமென்பது அநேக உயர்தர வைத்தியர்கள் கொள்கை. இது உண்மையிற் பயனளிக்கு மென்பதே எமது நம்பிக்கையும். ஆதலின், இதனை ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் கைக்கொள்ளவேண்டிய தவசியமெனச் சொல்லாமலே தெரியவரும்.

☞ வி. எம். கலியாணசுந்திரம், பி-ஏ.

லண்டன்மாநகருக்கு அதிகாரியான கதை.

உவிட்டிங்டன்.

[120-வது பக்கத்தொடர்ச்சி.]

பிட்ஸ் உவாரன் தன்னுடைய கப்பல் எதிர்பார்த்ததினங்களில் வராமல் போகவே மிகவும் விசனமடைந்தான். கப்பலுக்கு ஏங்குவானு; சாமான்கள் நஷ்டமாவதற்கு ஏங்குவானு; தன் அருமை சிநேகிதனன கப்பற்றலைவனுக்கு அழுவானு; பலவிதமாய் மனமுருகி ஒரு வாறு தேறினன். உவிட்டிங்டனுக்குத் தன்னுடைய பொருள்கள் ஒன்றும் நஷ்ட மில்லாவிட்டாலும் தன்யஜமானனுடைய நஷ்டத்தைத் தன்னுடைய நஷ்டத்தைவிட அதிகமென்று எண்ணி மிகவும் துக்கித்தான். கப்பல் இனித்திரும்பி வராதென்று தீர்மானம் செய்து விட்டனர்.

பிட்ஸ் உவாரன் போன்று வர்த்தக ராஜாக்களுக்கு ஒருகப்பல் நஷ்டமானதினுல் என்ன குறைவு வரப்போகின்றது! சில வாரங்களிலெல்லாம் சரியாய்ப் போய்விட்டன. வழக்கப்படி எல்லா வேலைகளும் நடந்து வந்தன. வியாபாரங்கள் மேல்மேல் விருத்தியடையுவே நஷ்டம் வந்ததென்பதே பிட்ஸ் உவாரனுக்குத் தெரியவில்லை.

இங்கு இவ்விதம் நடக்கக் கப்பல்த்தலைவன் தன்னுடைய வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு, ஆப்ரிக்கா தேசத்தவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பினன். லண்டன்நகரின் துறைமுகத்தில் கப்பல் வந்துசேர்ந்த சங்கதி பிட்ஸ் உவாரன் அறிந்ததும் ஆனந்தக்கடலில் மூழ்கிவிட்டான் என்று சொல்லவும் வேண்டுமா? ஓடி வந்தான் துறைமுகத்திற்கு! படகு செலுத்திக்கப்பலில் ஏறினன்! தன் அருமைச் சிநேகிதனன கப்பற்றலைவனைத் தழுவிக் கொண்டான். "நீ இறந்தாய் என்று விசனப்பட்டோமே; இன்று உன்னைக்கண்டு களிகூர்ந்தேன்! நீ பிழைத்து வந்தாயே! சந்தோஷம், சந்தோஷம்!!" என்று கூத்தாடினன்.

பிட்ஸ் உவாரனுடைய களிப்பு ஒருவாறு அடங்கியதும் கப்பல்தலைவன் தனக்கும் தன் கப்பலுக்கும் நேர்ந்த விருத்தாந்தங்களையெல்லாம் ஆதியோடு அந்தமாகச் சொல்லிமுடித்தான். ஆலிஸும் தன் தகப்பனுடன் கப்பலுக்கு வந்து இருந்தாள். உவிட்டிங்டனுடைய பூனைக்குவந்த அதிர்ஷ்டத்தையும், அப்பூனையால் உவிட்டிங்டனுக்குக் கிடைத்த லாபத்தையும் ஆலிஸ் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டாள். பிறகு எல்லாருமாய் வீடுவந்து சேர்ந்தார்கள்.

உடனே உவாரன் உவிட்டிங்டனைக் கூப்பிட்டு "பிள்ளாய்! உன் அதிர்ஷ்டத்தைக் கேட்டாயா? உனக்கு உண்மையாகவே சுவாமி கிருபை செய்தார் போல் தோன்றுகின்றது. உனது பொறுமைக்கும், நிதானத்துக்கும் நற்குணத்துக்கும், சலிப்பில்லா உழைப்புக்கும் என் பெருமான் தேவதேவன் அருளிச்செய்தபயன் இது! உன்னைப்போன்றவன் அல்லவா அதிர்ஷ்டசாலி" என்று சொல்லிப்புகழ்ந்தான்.

உவிட்டிங்டனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தனக்காவது அதிர்ஷ்டமாவது என்று மயங்குகிறான்; ஆலிஸ் முகத்தைப்பார்க்கிறான்; உடனே தன் எஜமானன் முகத்தைப் பார்க்கிறான்; உடனே இருவரையும்விட்டு கப்பல் தலைவன் முகத்தைப்பார்க்கிறான்; இதற்குள் அங்கேவந்து வாடியமுகத்துடன்நிற்கும் சமையல்காரியின் முகத்தையும் பார்க்கிறான். இவ்வாறு திகைக்கும் சிறுவன் முன்னிலையில் கப்பல் ஓட்டிகளும் பிட்ஸ் உவாரனுடைய சேவகர்களும் பலமூட்டைகளையும் பெட்டிகளையும் பிரித்தும் திறந்தும் ஏராளமான விலையுயர்ந்த தனங்களையும் செல்வங்களையும் குவியல் குவியலாகக் கொட்டினார்கள். உடனே கப்பல்த்தலைவன் "சிறுவனே! நீ மயங்கவேண்டாம்; இவையெல்லாம் உன்னுடைய செல்வம். உன்னிடமே கொடுக்கும்படி அவ்விராணியும் அரசனும் உத்திரவு செய்தனர். இதில் ஒரு தூசியாகிலும் மற்றவர்களுக்குச் சேருவதில்லை. உன் பூனை உனக்கு அன்புடன் சம்பாதித்துக் கொடுத்த திரவியம். அப்பா! இதை நீ எடுத்துக்கொண்டு சுகமாய் உன் வாழ்நாளைக் கழிக்கலாம்." என்றான்.

உவிட்டிங்டன் இதைக்கேட்டதும் தனது ஆச்சரியமிகுதியால் விம்மி விம்மி அழத்தொடங்கிவிட்டான். தன் எஜமானன் தன்னை ஆதரித்ததினால் தான் தனக்கு இவ்வளவு செல்வமும் வந்ததென்பதை செவ்வையாய் அறிந்தவன் ஆனதால் பிட்ஸ் உவாரனிடம் மிக பக்தியோடும் அன்போடும் சென்று, தண்டனிட்டு, "ஐயா! இவையெல்லாம் உம்முடைய அருளால் விளைந்த நன்மையல்லவா எனக்கு! இப்பொருள் ஒன்றும் எனக்குவேண்டாம்! இவற்றையெல்லாம் தாங்களே தயவுசெய்து அங்கீகரித்துக்கொள்ள வேண்டும்! உம்முடைய சிநேகம் மட்டும் என்னிடமிருப்பின் அதுவே இப்பொருள்களினும் பதின் மடங்குசிறந்தது!! தாங்கள் இப்பொருளை என்னுடையது என்று சொல்லாமல் தங்களுடையதாகவே பாவிக்கவேண்டும்" என்று அழுதுகொண்டே தன் எஜமானனை வேண்டிக்கொண்டான்.

இச்சமயத்தில் சபையில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் மிகப் பரிதாபப்பட்டார்கள். "ஆ" "உச்" "உச்" ஆகிய இவைபோன்ற பல சப்தங்கள் சோனை மேகம்போல் பொழிய ஆரம்பித்தன. ருக்குமணியம்மாளும் சற்றே படிப்பை நிறுத்தினாள்.

அகிலாண்டநாயகியம்மாள்—"எஜமானனும் சரி; அந்தப்பிள்ளையாண்டானும் சரி; இரண்டுபேரும் சமம்தான். இவனுக்குச்சமானம் அவனே ஒழியவேறில்லை. இவாள் இரண்டுபேர்களும் திரேதாயுகத்து ஜனங்கள்போல இருக்கின்றது. இல்லாவிட்டால், இக்கலியுகத்தில் இத்தனை நல்லவர்களும் உண்டா? அடுத்தவன் ஏமாறுனு? அவன் சொத்தைப் பிடுங்குவமா என்று சமயம் பார்த்துக்கொண்டு, குடியைக் கெடுக்கிறுளே ஜனங்கள்!! இந்த மஹா புருஷர்கள் எவ்வளவு கம்பீர குணமுடையவர்கள்!! ஏனடியம்மா! ருக்மணீ, இக்கதை நடந்தகாலம் எப்பொழுதென்று சொன்னுய் ஆதியில்."

ருக்மணி:—"பாட்டி தேவரீர் நினைக்கின்றபடி திரேதாயுகத்தில் நடந்த கதையன்று இது; கலியுகத்தில் நடந்த உண்மையான சரித்திரவிஷயம்; இன்றைக்குச்சற்று ஏறக்குறைய 600, வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சங்கதி—"

லக்ஷ்மி:—"இப்படியே மனுஷாள் எல்லாம் இருந்துவிட்டால்லோகத்தில் அக்கிரமம் என்பதே இல்லாமல் போய்விடும். அந்தக்குழந்தைப்பிள்ளை தான் பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு விட்டால் என்னபோயிற்று? ஏன் இப்படி சண்டித்தனம்' பண்ணுகிறுன்?"

சாவித்திரியம்மை:—"லக்ஷ்மீ! குழந்தாய்! ஏது நீகூட இன்று வாய் விட்டுப் பேசிவிட்டாய். உன்னைப்போன்ற கபடமற்ற ஜனங்களும் உலகத்தில் இருக்கின்றனர்; 'தலையில் அடித்தாலும் தட்டிக்கொடுத்ததாக எண்ணக்கூடியவர்கள்'. நீ சொல்லுகிறபடி செய்தால், அதைக் கீழ்மக்கள் காரியமென்று பெரியவர்கள் எண்ணுவார்கள். ஏனெனில் அற்பப் புத்தியுடையவர்கள் தான் தங்களுக்கு ஆஸ்தி கிடைத்துவிட்டதே போதுமென்று தலைகீழாய் விழுவார்கள்; அவர்களுக்குத்தான் பணம் பிரதானம். மனுஷாள் வேண்டியதில்லை."

மீனுக்ஷியம்மாள் "ஆமாம்! ஆமாம்! மாமி நீங்கள் சொல்வது சரி. மச்சாத்து சீதம்மாள் பிள்ளையைப் பற்றிக்கூட அப்படித்தான் நம்மூரில் சொல்லிக்கொள்ளுகிறுர்கள். ஒருதுரையின் சிபார்சியினுல் உத்தியோகம் கிடைத்து 100 ரூபாய் சம்பளம் ஆனதும் அந்த துரையையே லக்ஷியம் செய்யாமல் அவமதித்தானும்—"

ஞானம்பிகை:—"அப்படிச் செய்யக்கூடியவனு நமது விட்டிங்டன்! பரமசாது; இதுதான் எஜமானபக்தி;——கதையை முடித்துவிடுவோம். பொழுதுபோயிற்று; மணியும் 6 அடிக்கின்றது. லக்ஷ்மியக்காளும் வீடு போகவேண்டியிருக்கும். கச்சேரியில் இருந்து வருகிறவர்கள், வீடுவந்து சேரும்பொழுதும சமீபிக்கின்றது"

ருக்:—"ஆமாம்; நானும் போகவேண்டும். கதை கொஞ்சம்தான் பாக்கியிருக்கிறது. கல்லியாணம் முடிந்துவிட்டால் மங்களம் பாடலாம். (படிக்கிறுள்).

"சிறுவனுன உவிட்டிங்டன் பிட்ஸ் உவாரனைக் கெஞ்சிக்கேட்க அதைக் கண்ட வர்த்தகன் ரிச்சர்டைத் தழுவி மனமாற ஆலிங்கனம்செய்துகொண்டு "என் மகனே! நீ சொல்வது தப்பு; உன் சொத்து உன்னுடையதுதான்.

அதை எப்படி நான் அங்கீகரிப்பது? நீ குழந்தைப் பிள்ளையாகையால் ஆலோசனை யில்லாமல் பேசுகிறாய். எது எப்படியானாலும் உன் திரவியத்தில் ஒரு காசுகூட எனக்கு வரவேண்டிய நியாயமேயில்லை. உன்னுடையதே யாகையால் நீ அதை வைத்துப்பிழை; என்றால் கூடியவரையில் உனக்கு வேண்டிய உபகாரங்களை நானும் செய்கிறேன்'' என்றான்.

கப்பல் தலைவன் அவ்விடமிருந்து விடைபெற்றுக்கொண்டு தன் வீடு போய்ச்சேருமுன் மறுபடி ஒருமுறை உட்டிங்டனைப் பார்த்து "உனக்குச் சேரவேண்டிய சொத்து இன்னுமொன்று இருக்கின்றது. அதுவும் ஆப்பிரிகாதேசத்து இராஜாவாலும் இராணியாலும் கொடுக்கப்பட்டதுதான்; அதையும் பெற்றுக்கொண்டு எனக்கு விடைகொடு அப்பா!'' என்று சொல்லித் தன் கப்பலோட்டிகளில் ஒருவனைக் கூப்பிட்டு தான் கீழேவைத்துவிட்டு வந்த கூடையைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். கொண்டுவந்த கூடையைத் திறக்கவே அதினின்று உவிட்டிங்டனுடைய பூனை வெளியே குதித்தது. தனது பழைய எஜமானனும் சினேகிதனுமான டிக்கைப் பூனை கண்டதும் அவனிடம் குதித்தோடிப்போய் ஒரே தாவாய் அவன்மேலேறி, முகத்துடன் முகம் வைத்துக் கொஞ்சிவிளையாடிற்று. பூனையைக் கட்டி முத்தம் வைத்துக்கொண்டான் உவிட்டிங்டன். அன்றுமுதல் அப்பூனை இறக்கும் வரையில் தன் அன்புள்ள எஜமானனை விட்டுப் பிரியவேயில்லை.

செல்வம் படைத்த ரிச்சர்ட் விட்டிங்டன், தன் திரவியத்தை நல்ல வழியில் செலவழித்தான் என்பது சொல்லாமலே விளங்கும். தான் ஏழையாய் லண்டன் தெருவில் சந்தியில் நின்றுகொண்டு 'சோற்றுக்குச் செத்ததை' எண்ணி ஏழை ஜனங்களுக்கு வயிறு ஆற உணவளிப்பான். தனது பெற்றோர் இறந்தது மன்றித் தன்னை அன்புடன் வளர்த்திய செவிலித்தாயும் இறக்கவே, குழந்தைப் பருவத்தில் பிரியத்துடன் போஷித்த தன் கிராமத்து ஜனங்களையும் விட்டிங்டன் மறக்கவில்லை. அக்கிராமத்தாருக்குப் பலவிதமாய் உபகாரம் செய்தான். தன்னுடன் பழகினவர் ஒவ்வொருவருக்கும் உற்ற நண்பனாய் இருந்தான். இச்சமயத்தில் அவன் பிட்ஸ் உவாரனுடைய சமையல்காரிக்கு என்ன செய்தான் என்று நமது நண்பர்களில் சிலர் சந்தேகிக்கலாம். அவளையும் உவிட்டிங்டன் வெறுக்கவில்லை. அவளுக்கு மட்டும் ரிச்சர்டை நிமிர்ந்து பார்க்க முகமில்லாவிட்டாலும் அவன் அவளுக்கும் கூடிய வரையில் உபகாரம் செய்தான். இவ்விதமாய்ச் சில நாட்கள் சென்றன.

பலநாள் ஆயும் உவிடிங்டன் மட்டும் அடிக்கடி பிட்ஸ் உவாரனிடம் சென்று தனது ஏராளமான செல்வத்தில் ஒரு பாகத்தையாவது அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்துவான். ஆனால் அவ்வார்த்தைகளை யெல்லாம் வர்த்தக சிரோமணி காதில் போட்டுக்கொள்ள வேயில்லை. ரிச்சர்டுக்கு வயது வந்து 'மைனர் நீங்குகிறவரையில் அவனுக்கு பதிலாய் அவனுடைய ஆஸ்திகள் எல்லாவற்றையும் பாதுகாத்து வருவதாக ஏற்றுக்கொண்டான். மஹாபுத்திசாலியான பிட்ஸ் உவாரனே காரியஸ்தனாய் அமரவே, சிறுவனுடைய செல்வம் பொங்க ஆரம்பித்தது. நாளடைவில் ரிச்சர்டும் பட்டு வியாபாரத்தில் பழகி பிட்ஸ் உவாரனுடன் வியாபாரம்செய்து புத்திசாலி யென்றும், சாமர்த்தியசாலியென்றும், நீதிவந்தன் என்றும், சத்தியவான் என்றும், பெயர்வாங்கினான். இவர்கள் ஷாப்புபட்டு உலகமெங்கும் சிறந்த

தென்று மதிக்கப்பட்டது. ஜனங்கள் இதையே வாங்கினபடியால் அதிக லாபம் கிடைத்துவந்தது. லண்டன் நகரில் ரிச்சர்டைத் தெரியாதவர்களே கிடையாது.

இனிப் பேசவேண்டிய விஷயம் ஒன்றுதான் உளது. தன் வாழ்நாட்களைத் தனியேகழிக்க உவிட்டிங்டன் பிரியப்படவில்லை. உலகம் ஏற்பட்டகாலமுதல் மனிதனுக்கு சுபாவமாய் உண்டாகிற விருப்பம்போல் ரிச்சர்டுக்கும் மனைவி வேண்டுமென்ற ஆசைபிறந்தது. ஆலிஸ் உடன் நெடுநாள் பழகி அவள் குணங்களை நன்கு அறிந்தவன் ஆகையால் அவளே தனக்கு 'அநுகூல பத்னி' யாவள் என்று கண்டு, அவள் மனதைப் பலவிதத்திலும் திருப்திசெய்ய ஆரம்பித்தான். அப்பெண்மணியும் சிறுவனைக்கண்ட நாள்முதல் அவனது வினயத்தையும், பொறுமையையும், சுறுசுறுப்பையும் பார்த்து சந்தோஷமடைந்தவள்!! ஆகையால் அவள் மனமும் உவிட்டிங்டன் மனம் சென்ற வழியே சென்றது என்பது சொல்லவேண்டுவதில்லை. இருவர்களின் மனப்போக்கையும் அன்பின் உருக்கத்தையும் அவர்களுடைய செயலால் குறிப்பாய் அறிந்த பிட்ஸ் உவாரன், பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்று எண்ணி அவர்களுடைய மனம் குளிரும்படி குழந்தைகளின் நேசத்தை அங்கீகரித்தான். உவிட்டிங்டன் தக்க வயது அடையவே கலியாணம் வெகு சிறப்பாய் நிறைவேறிற்று. தான் தனவான் என்று எண்ணி சிறிதும் கர்வமடையவில்லை. மனைவியும், கணவனும் ஏழைகளுக்கு தர்மம் செய்துவந்தார்கள். தங்கள் காலத்தையும் நற்காரியங்கள் செய்வதில் போக்கி வந்தார்கள்.

வருஷத்துக்கு வருஷம் உவிட்டிங்டனுடைய செல்வம் விருத்தியடைந்தது. நகரில் அவனுக்கு உள்ள மரியாதையும் இவ்வளவென்று அளவிடமுடியாது. பார்லிமெண்ட் மஹா சபையில் ஒரு மெம்பரானான். இங்கிலாந்தின் அரசன் புகழ்பெற்ற பிரபுவான உவிட்டிங்டனுக்கு தக்க மரியாதைகள் பல செய்ததுமன்றி 'நைட்' என்ற பட்டமும் கொடுத்தார். மூன்றுமுறை லண்டன் நகருக்கு 'மேயர்'—அதாவது நாயகன்—ஆனான். சிறுபிள்ளையாய் இருக்கும்போது பிட்ஸ் உவாரன் வீட்டில் அவஸ்தை பொறுக்கமாட்டாமல் லண்டனை விட்டு ஓடத்தலைப்படவில்லையா? அப்பொழுது பசியாலும் தேகப் பிரயாசத்தாலும் ஒரு கல்லின்மேல் களைத்துப்போய்ப் படுத்துக்கொண்டான் என்று சொல்லவில்லையா? அப்பொழுது கேட்ட மணி சப்தம் "திரும்பும் திரும்புமையா உவிட்டிங்டன்—லண்டன் நாயகனே திரும்பும்" என்றது தோன்றிற்றே—அதே மாதிரி லண்டன்மாநகருக்கு 'லார்டு மேயர்' என்ற அதிகாரத்தை ஒரு முறை மட்டும் இன்றி மும்முறையும் பெற்றான். மூன்றும்முறை லண்டனுக்கு லார்ட்மேயராய் இருந்தபோது 1419 - ஆல் பிரான்சில் நடந்த யுத்தத்திலிருந்து திரும்பி வந்த 5-வது ஹென்றி அரசனையும் இராணியையும் அழைத்துப் பல பிரபுக்களுடன் அவர்களுக்கு விருந்தளித்தான். விருந்து சாப்பிடும்போது அரசர் "இம்மாதிரியான பிரஜை ஒருவரை எவ்வரசனாவது இதற்குமுன் அடைந்திருப்பானோ என்று சந்தேகிக்கிறேன்—ஒருவருக்கும் கிடைக்கமாட்டாதென்பதே என் துணிவு; நான் மஹா அதிர்ஷ்டசாலி!!" என்றாராம். இன்றைக்கும் உவிட்டங்டனுடைய உதாரகுணத்தையும் புகழையும் எல்லாரும் கொண்டாடுகின்றனர்.

பலநாள் செல்வாக்காய் வாழ்க்கை நடாத்தி எல்லா ஜனங்களாலும் உச்சிமேல் கொள்ளப்பட்டு தன் மனைவியின் காலத்துக்குப்பின் 20 வருஷம் கழித்து அமைதியாய் விண்ணுலகடைந்தான் என்ற விஷயத்தை நாம் இங்கே விரிவாய்ச் சொல்லவேண்டுவதில்லை.

மங்களம் முதலான பாட்டுகள் பாடின பிறகு.—

கமலாபாய்—"இன்றைப்போது நன்றாய்ச் செலவழிந்தது; பிள்ளைகளென்றால் ரிச்சார்டைப்போல் பிள்ளைகள் இருக்கவேண்டும்."

ஞானம்பாள்:—"இன்னும் சில நாளைக்குள் நீயும் பேசப்பழகிவிடுவாய் போலிருக்கிறது."

கமலாபாய்:—"அப்படியில்லை; நான் பேசாவிட்டாலும் கதையின் சாரம் பேசச்சொல்லுகின்றது;"

சாவித்திரியம்மாள்:—ஆம் ஆம், உண்மையே! ஈசன் உனக்கு ரிச்சார்டைப்போன்ற செல்வக்குழந்தை சீக்கிரம் கிடைக்கும்படி அருள்புரிவாராக; கதையின் சிறப்பும் அதைப் பின்னும் அதிக சிறப்போடு படித்த ருக்குமணியம்மாளின் வாய்ச்சிறப்பும் பொன்பூவுக்கு மணம் வந்ததுபோல் இருக்கிறது."

ருக்மணியம்மாள்:—மாமி,நீங்கள் என்னை முகஸ்துதி செய்யக்கூடாது— (உண்மையாகவே முகஸ்துதியில் ருக்மணிக்குப் பிரியம் தான்.)

ஞானம்பாள்:—மணி 4 ஆகப்போகிறது; அடுத்த வாரம் கூடுவோம். இப்போது எல்லாரும் தயவுசெய்து தாம்பூலம் எடுத்துக்கொள்ளவேண்டும். வண்டிகொண்டுவரச் சொல் அப்பா—"

என்று என்னைப்பாத்து சொல்லவே, நான் ஓடவேண்டியது தானே— எல்லாரும் புறப்படும்படி வண்டிகள் வந்துநிற்கின்றன. லக்ஷுமியம்மாள் வீடு பக்கத்திலிருப்பதால் இரண்டு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு அவள் மட்டும் நடந்தே புறப்பட்டு விட்டாள. மற்றவர்கள் வண்டியேறி அவரவர்கள வீட்டுக்குப் பிரயாணமானார்கள்.

☞ வாயில் காப்போன்.

பிராணிகளின் பலம்.

பிராணிகளின் வாழ்க்கையைப் பற்றி ஆலோசிக்கும்போது, அவை மிகவும் வியப்பாய்த்தோன்றும். ஒவ்வொரு பிராணியின் குணத்தையும் நன்றாய் அறியும்பொருட்டு பரிக்ஷைகள்செய்து அவற்றின் வழியே பல உண்மைகளை ஆராய்ந்து சொல்லும் சாஸ்திர பண்டிதர்கள் இருக்கின்றனர். அவ்வாறான பரிக்ஷைகளில் சிலவற்றைப் பற்றி அப்பொழுது பேசுவோம்.

மதுரை நகரில் திருமலை நாய்க்கன் மஹாலில்மேலே ஏறுவதற்கு ஒரு திருடன் உடும்பின் உதவியால் ஒரு கயிற்றை ஆதாரமாகக் கொண்டு மேற்சென்றான் என்று சொல்லுகின்றனர். உடும்பு ஒரு பொருளைப் பற்றிக்கொண்டால் இலேசில் விடுவதில்லை என்றும், எவ்வளவு பலத்துடன் ஒருவன் உடும்பை இழுப்பினும் அவ்வளவுக் கவ்வளவு அதிக பலத்துடன் அது தான்பிடித்த பொருளை பற்றிக் கொள்ளுமே ஒழிய பிடித்தபிடியை விடவே மாட்டாது என்றும் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பழகின உடும்புகளை வைத்துக்கொண்டு திருடர்கள மாடிகளின்மேலும், மதில்களின்மே

னும் வெகு சுளுவாய் ஏறி விடுகின்றனர் என்று எனது பாட்டி எவ்வளவோ தடவை சொல்லி யிருக்கிருள். தற்காலத்தில் எத்துணை திருடர்கள் பழகின உடும்புகளை வைத்து இருக்கின்றுர்களோ அது நமக்குத் தெரியமாட்டாது! போலீஸ் உத்தியோகஸ்தரைத்தான் கேட்டு உண்மை இன்னதென்று அறியவேண்டும். அல்லது இப்பொழுது உடும்புகளை உபயோகிப்பதை யாராவது கண்டிருந்தாலும் அவர்கள் தயவுசெய்து தாம் பார்த்ததைத் தெரியப் படுத்தினுலும் அநுகூலமே.

நிற்க, உடும்பின் விசித்திரகுணம் இங்ஙனம் என்று சொல்ல, மற்றப் பிராணிகளைப்பற்றி கவனிப்போம்.

வண்ணுன் கழுதை தூக்கும் கனம் எவ்வளவு என்று பாருங்கள்! நாயும் ஆட்டுக் குட்டிகளும் சில தேசங்களில் வண்டியிழுக்கின்றன. ஒட்டகமோ கனமான மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு நூற்றுக் கணக்கான மைல்கள், பாலை வனங்களிலும் வனந்தரங்களிலும், ஜலம், ஆகாரம் இவற்றை அபேக்ஷியாமல் பொறுமையுடன் செல்லுகின்றன. வெயில், மழை, காற்று, மண்மாரி, மணல்மாரி—இவை ஒட்டகத்துக்கு இலக்ஷியமேயில்லை. மாடு பாரம் இழுப்பதை நம் இந்தியாவில் நாம் தினமும் கண்டு இருக்கிறோம். ரயில்வே இல்லாத ஊர்களில் கிராமாக் கிராமங்களுக்கு செல்லும் மாட்டு வண்டிகளையும் அவற்றில் ஏற்றியுள்ள நெல் முதலிய தானிய மூட்டைகளின் தொகுதியையும் ஆலோசித்துப் பார்ப்பின் மாடுகளின் இழுக்கும் சக்தி இவ்வளவென்பது தெளிவாய்ப் புலப்படும்.

மேற்கூறிய ஜந்துக்களின் கனத்தையும் அவை இழுத்துச் செல்லும் பாரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தம் கனத்தைவிட எம்மாத்திரம் பாரங்களை அவை இழுக்கக் கூடும் என்று தீர்மானம் செய்யலாம். மனிதன், குதிரை—ஆகிய இப்பிராணிகள் தம் கனத்தைவிட 5 பங்கு அதிகமான கனத்தை இழுத்துச் செல்லும்.

நாம் தினமும் காணும் மிருகங்களைப் பற்றி அறியக்கூடிய விஷயம் இவ்வளவு. பூச்சி, புழு, இவற்றின் சக்தி இன்னும் அற்புதமானது. நம்மவர்களில் பலர் இத்தகையஜந்துக்களின் பலத்தைப்பரிக்ஷைசெய்யலாம். மிஸ்டர் ஜெ-ஜெ-உவார்ட் (J. J. Ward) என்னும் ஐரோப்பிய தத்துவசாஸ்திரி தாம் செய்த பரிக்ஷைகளில் சிலவற்றை ஸ்ட்ரேண்ட் (Strand) என்னும் பத்திரிகையில்எழுதியிருக்கிறுர். ஒருபுழு மிகச்சிறிதாய் இருப்பினும் தன்கனத்தைவிட 25 மடங்கு அதிகமான கனத்தை இழுக்கின்றது என்கிறுர். நான் குழந்தைப் பருவத்தில் ஒரு பித்தளை விக்கினேசுவரன் வைத்து இருந்தேன். அதன் கனத்தை இப்பொழுது சரியாய்ச் சொல்லக் கூடவில்லை. ஏனெனில் அது இப்பொழுது என்னிடம் இல்லை. அந்த விக்கினேசுவரனுடைய அடிபாகம் குழிவாய் இருக்கும். அக்குழியின் அடியில் ஒரு 'சாணி' வண்டை வைத்து மூடி சமமான தரையில் விட்டபோது வண்டு நகர்ந்துகொண்டே விக்கிரஹத்தையும் இழுத்துச் சென்றது. குழந்தையாகிய நான் அக்காலத்தில் என் பெற்றோர்களை அழைத்து 'விக்கினேசுவரர் ஓடுகிறுர் பாருங்கள்' என்று வண்டின் இழுக்கும் சக்தியைக் காண்பிப்பதுண்டு. மிஸ்டர் உவார்ட் செய்த பரிக்ஷைகளும் இம்மாதிரியானவைதான். அவர் உபயோகப் படுத்தி

29

யது ஒரு சிறிய பொம்மைவண்டி; அவ்வண்டியில் வேண்டிய கனங்களை வைத்துப் பரிக்ஷை நடத்தவும்கூடும். மிஸ்டர் உவார்ட் பரிக்ஷைசெய்த ஒரு வண்டு 6 கிரெயின் எடை இருந்ததாம். அவ்வண்டு 182 கிரெயின் எடை உள்ள சிறு வண்டியையும் அதில் போட்டுள்ள சிறு வஸ்துக்களையும் இழுத்துச் சென்றதாம். ஒரு புற்று ஈ (humble bee) தன் கனத்தைவிட 300 மடங்கு கனமான வண்டியை இழுத்துக்கொண்டு போயிற்று என்கிறார்.

உடும்பைப்போல் வஸ்துக்களைப் பற்றிக்கொள்ளும் சக்தியும் பல ஜந்துக்களுக்கு உண்டு. ஆடைகளில் பற்றிக்கொண்டிருக்கும் தேள் ஒன்றின் கொடுக்கில் ஒரு நூலைக் கட்டி அந்நூலின் நுனியில் சிறு கற்களைக் கட்டித் தொங்கவிட்டால் எவ்வளவு பலமாய்ப் பற்றிக் கொள்ளுகின்றன என்பது விளங்கும். குழந்தைகள் 'தட்டாரப் பூச்சி' பிடித்து விளையாடுவதைப் பலரும் கண்டிருக்கலாம். சிறு கல்லின்மேல் உட்காரும் பூச்சியைப் பிடித்துத் தூக்கினால் கல்லைப் பற்றிய பூச்சி கல்லோடு வருவதைக் காணலாம். எறும்பு சதையைப் பிடித்துக் கடித்துக் கொண்டால் நாம் எடுக்கும்போது சதையைப் பிடுங்கிக்கொண்டு வந்துவிடுகின்றன. வயிற்றில் முட்டை நிறைந்த சினைப்பல்லி ஒன்று முழுத்தேளைப் பிடித்துக்கொண்டு தன் நகங்களின் பற்றினால் அச் சுவரின்மேல் நகர்ந்து செல்வதை அநேகர் பார்த்து இருக்கலாம். நெட்டுக் குத்தலான சுவற்றின்மேல் பற்றிக்கொண்டு நின்ற ஒரு பூச்சி Ear Wig—தன்னைவிட 26 மடங்கு கனமுள்ள ஒரு வஸ்துவைத் தாங்கிக்கொண்டு விழாமல் நின்றதென்று மிஸ்டர் உவார்ட் சொல்லுகிறார். ஒவ்வொரு ஜந்துவையும் பற்றிப் பேசப்புகின் பெருகும்.

இவ்விதமாய் ஜந்துக்களுக்கு அவற்றின் உழைப்புக்கும் வழக்கங்களுக்கும் தக்கபடி பலவாறாய் பலமுள்ள அவயவங்களை அமைத்து இருக்கின்றார் ஈசன்! விழித்துப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் கடவுளது மேன்மையும், அபார சக்தியும் புலப்படும்!!

சிற்றுயிர் இலக்கணங்கற்போன்.

ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியின் சரித்திரம்.

(Copy-right reserved).

விக்டோரியா மகாராணியார் அரசுபுரிந்த காலத்தில் நாம் அவர்களது ஜீவிய சரித்திரத்தில் சிறு கதைகளாக எடுத்து நமது பத்திரிகையில் பிரசுரித்தோம். இவர்கள் இறந்தபின் எ-வது எட்வர்ட் சக்ரவர்த்தி பட்டத்துக்கு வந்தபொழுது எட்வர்ட் சக்ரவர்த்தி அலக்சாண்டிரா ராணி இவர்களின் சரித்திரத்தைப் பிரசுரித்தோம். இப்பொழுது அவர்களது புத்திரராகிய 5-வது ஜார்ஜ் சக்ரவர்த்தி பட்டத்திற்கு வந்திருக்கிறது யாவருக்கும் தெரியும். இவருடைய திவ்ய சரித்திரம் நமது பத்திரிகையில் இம்மாதம் முதல் வெளிவரும். நமது சக்ரவர்த்தியின் சரித்திரம் யாவருக்கும் தெரியவேண்டுமல்லவா? மேலும் காலஞ்சென்ற விக்டோரிய மகாராணியாரின் மேல்பார்வையிலேயே நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியிருந்தார். ராணியாருக்கு இவர்மீது மிகவும் அன்பு மிருந்தது. மேலும் அலக்சாண்டிரா ராணியாரும், எ-வது

எட்வர்டு சக்ரவர்த்தியும் தங்களது புத்திரனது படிப்பு, நற்சகவாசம், கப்பல் தொழில் முதலியவைகளைக் கவனித்து வந்தார்கள். ஆகையால் அவர்களது குணங்களெல்லாம் இவரிடத்தில் அமைந்திருக்குமல்லவா? அவைகளை நமது நேயர்கள் தெரிந்து கொள்வதற்கும் விரும்பாமலிருக்கமாட்டார்கள். மேரிராணியாரும் ஏழைகளிடத்தில் பச்சாத்தாபம், கஷ்டப்படுபவர்களிடத்தில் இரக்கம் முதலிய குணங்களை யுடையவர்கள். தங்கள் குழந்தைகளுக்கும் நல்லறிவை வூட்டி யிருக்கிறார்கள். பிரிடிஷ் ஆளுகையால் நமக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாயிருக்கின்றன. அவ்வித பிரிடிஷ் சிம்மாசனத்திற்கு ஒரு ரத்தனம்போல் இவர்கள் விளங்கிவருகிறார்கள்.

ஜனனமும், பால்யப்பருவமும்.

ஏ-வது எட்வர்ட்சக்ரவர்த்திக்கும் அலக்சாண்டிராராணியாருக்கும் 1865-ம் வருஷம் ஜூன்மீ 3உ மல்பரோ அரமனையில் ஒரு ஆண் குழந்தை ஜனித்தது. இக்குழந்தை காலஞ்சென்ற விக்டோரியா ராணியாருக்குப்பேரன். இக்குழந்தையை மிக்க செல்வமாக வளர்த்துவந்தார்கள். ஜூலைமீ 7உ இக்குழந்தைக்கு ஞானஸ்னனம் விக்டோரியாவுக்கு முன்னும் தங்களது பந்து ஜனங்களுக்கு முன்னும் விண்ட்சர் அரமனையில் செய்வித்தார்கள். அச்சமயத்தில் விக்டோரியாராணியார் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. இது உலகவழக்கமன்றோ. சாதாரண ஜனங்களுக்கே, ஒரு பேரன் பிறந்தால் எவ்வளவோ ஆநந்தங்கொள்ளுகிறார்கள்; சகல சம்பத்தும் பாக்கியமும் கூடிய விக்டோரியாவுக் குண்டான ஆநந்தத்திற்கு கேட்கவேண்டுமா?

இக் குழந்தைக்கு ஐந்தாவது ஜார்ஜ் என்று அச்சமயத்தில் நாமமிட்டார்கள். இக்குழந்தை வோயிட் தீவிலுள்ள ஆஸ்போர்ன் என்கிற திவ்ய அரமனையில் தனது சகோதரிகளுடனும், சகோதரனுடனும், கொஞ்சிக் குலாவி விளையாடிக் கொண்டிருந்தது. மாரிகாலத்தில் சன்டிரிங்காம் அரமனையிலும் இக்குழந்தை வளர்க்கப்பட்டு வந்தது. ஆஸ்பர்ன் அரமனையைச் சுற்றி அழகான தோட்ட மிருந்தது. இங்கு இக்குழந்தைகள் சிறு விசித்திரப் பீரங்கியை வைத்துக்கொண்டு விளையாடி வந்தார்கள். இப்பொழுதும் அது அங்கு வைக்கப்பட் டிருக்கிறதாம். ஜார்ஜ் குழந்தைக்கு வயது ஏழு ஆனதும் கப்பற்படையில் சேர்க்கப்பட்டு அத் தொழில்கள் கற்பிக்கப்பட்டு வந்தார்.

லீடுமுறை தினங்களில் எட்வர்டு சக்ரவர்த்தியும், அலக்சாண்டிராராணியும் டென்மார்க் தேசத்து அரசருடன் பர்ன்ஸ்டார்ப் என்கிற யிடத்தில் காலங்கழிக்கும் வேளைகளில் ஜார்ஜ் குழந்தை தைரியமாக அங்குள்ள நதியில் நீந்துவான். பயமின்றி ஜலத்தில் குதித்து முழுகி விளையாடுவான். பின்பு ஜார்ஜும் இவன் சகோதரனும் டார்ட்மௌத்தில் நீந்த கற்பிக்கப்பட்டபொழுது ஜார்ஜ் தான் முதலில் ஜலத்தில் சிறிது மச்சமின்றி குதிப்பானும். டென்மார்க் தேசத்தி லிருக்கும்பொழுது இவர்கள் வெகு குதூகலமாயிருப்பார்களாம். ஏனெனில் அங்கு இவர்கள் உறவினர்களாகிய ருஷியா ஜெர்மனி, கிரீஸ்தேசத்து மன்னர்கள் விருந்தினர்களாக வந்திருந்தார்கள். அவர்களுக்கு இக் குழந்தைகளின்மீது மிக்கவாஞ்சை. முக்யமாக ருஷிய தேசத்து மன்னர் நிக்கலஸுக்கு ஜார்ஜுமீது மிக்க அன்பும், பிரியமும் உண்டானதுடன் இக்குழந்தையுடன் அடிக்கடி விளையாடி வந்தாராம்.

இக் குழந்தைகளுக்கு உபாத்தியாயர்களாக கேனன்பர்ச், கேனன்தார்வர், ரெவரெண்டு W. L. ஆன்ஸ்லோ எனகிற வித்யாசிரோமணிகள் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் சிறந்த அறிவுடையவர்கள். ஆனால் வேலையோ வெகு முக்கியமானது, கஷ்டமுள்ளது; ஏனெனில் ராஜாக்களுடைய பிள்ளைகளை வெகு புத்தி நுட்பத்தால் அவர்களுடைய எண்ணங்களை யெல்லாம் அறிந்து பக்குவமாக நல்லவழியில் அவர்களை நடத்தவேண்டும். இது சுலபமானவேலையா? சாமானிய மனிதர்களால் செய்யக்கூடுமா? இவர்களில் முக்கியமான உபாத்தியாயர் கேனன்டால்டன். இவர் ஜார்ஜுக்கு உபாத்தியாயராக 1871-ம் வருஷம், நியமிக்கப்பட்டார். இவர் ஆலோசனைப்படிதான் ஜார்ஜ் நடக்கவேண்டும். இவர் மேலும் கற்பித்தும் வந்தார்; ஆறுவருஷமான பின் குழந்தைகளுக்கு இவர்தலைமை உபாத்தியாயராகவும்நியமிக்கப்பட்டார்.

1871-ம் வருஷம் ஜார்ஜ் அரசருடைய தகப்பனார் அசௌக்யமாக யிருந்தார். எங்கு இவர் இறந்துபோய் விடுவரோ என்கிற திகிலை எல்லாதேசத்தார்களும் அடைந்திருந்தார்கள். நமது ஜார்ஜ் அரசர் 6-வயது குழந்தையாயிருந்தும் மிக்க விசனப் பட்டுக்கொண்டே யிருந்தார். இவருடைய மூத்த சகோதரனும், மூத்த சகோதரியும் அலக்சாண்டிரா ராணியாருடனும் மேரி ராணியாருடனும் கோயிலுக்குப்போய் கடவுளை வணங்குவார்கள். அப்பொழுது இவர் சிறு குழந்தையா யிருந்தமையால் அவர்களுடன்போக முடியவில்லை; ஆனால் அப்பொழுது இவருக்குண்டான துக்கம் இன்னும் ஞாபகத்திலிருக்கிறதாம்.

நமது அரசர் எக்காரியத்தையும் துணிந்து செய்வதில் விருப்பமுடையவர். எதைச் செய்தபோதிலும், அதைப் பூராவாக செய்துமுடிப்பார். குதிரையின்மீது முதலில் தாமே ஏறி சவாரிசெய்தார். குதிரை நடத்தும் சமர்த்து இவரிடத்திலுண்டு என்பதைக் காண்பித்ததாம். ஒருசமயம் வேட்டையாடு மிடத்திற்குப்போனார். இது இவருக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. மேலும் கூடியவரையில் வேகமாய் வேட்டை நாய்களிருக்கு மிடத்திற்குச் சவாரிசெய்து சென்றாராம். இவருக்குப் பனிக்கட்டிமேல் நடப்பதிலும் மிக்க பிரியம். அதாவது சிற்சில மாதகாலங்களில் இங்கிலாந்தில் பனிக்கட்டி யிருக்குமிடங்களில் இவர் பனிக்கட்டியின்மேல் ஒருவித வண்டியை விட்டுச்செலவார். அல்லது காலுக்கு அணியும் பூட்சுக்கு ஒருவித சறுக்கு கம்பிகளை அடித்து, அதைக்காலில் போட்டுக்கொண்டு பனிக்கட்டியின்மீது நடப்பதில் மிகப்பிரியமாம்.

சில வேளைகளில் இவரும் இவருடைய சகோதரும் சபைகளுக்கும் போவார்கள். அங்கு இவர்சகோதரர் கூச்சத்துடனும் ஒருவருடனும் பேசாமலிருப்பார்; ஆனால் ஜார்ஜின் விசேஷ ஊக்கம் அச் சமயங்களில் எப்பொழுதும் கீழ்ப்படிந்திராது. சிரித்த முகக்குறி தனது சகோதரிகள் கவனிப்பதைக் கெடுத்துவிடும். ஆகையால் அரமனையில் பந்துக்கள் இந்த சுறு சுறுப்புள்ள அரசரை "அடிக்கடி தொந்திரவு செய்கிற சிறு குழந்தை" என்று சொல்வார்கள்.

சார்லஸ் கிங்ஸ்லே இராஜ குடும்பத்து குழந்தைகளிடத்தில் மிகவும் பிரிய முடையவரா யிருந்தார். இவர் சண்டிரிங்காம் அரமனைக்கு வந்தபொ

மூது குழந்தைகளுக்கு வேடிக்கைக் கதைகளைச் சொல்லிவந்தனர். மேலும் தமக்கு தாபரசங்கம சாஸ்திரத்திலுள்ள அபார அறிவைக்கொண்டு அவர்களுக்கு அச்சாஸ்திரத்தையும் போதித்துவந்தார். இவர் மரணதருவாயி லிருக்கும்பொழுது ஜார்ஜும் அவர் சகோதரரும் அநுதாபக் கடிதங்கள் எழுதியனுப்பியதுடன், சில செடி புஷ்பங்களைப் பார்த்து சித்திரம் வரைந்தும் அனுப்பினார்களாம். அவைகளைக் கண்டு கிங்ஸ்லே மிகச் சந்தோஷப்பட்டது அச்சமயத்தில் உருக்கத்தக்கதா யிருந்ததாம்.

சன்டிரிங்காம் இராஜ குமாரர்களுக்கு மிகப் பிரியமான இடம். ஏனெனில் இங்கு இவர்கள் சுயர்ச்சியாக விளையாடிக் கொண்டும் தங்கள் படிப்பை படித்துக்கொண்டு மிருந்தார்கள். ஸ்காட்லண்டில் எட்வர்ட்டும், ஜார்ஜும் நிஜாரில்லாமல் ஒருவித சட்டையை கால்வரையிலும் அணிந்திருந்தார்கள். அத்தேசத்தில் ஹைலேண்டர்கள் இவ்வித உடுப்பைத்தான் தரிப்பது வழக்கம். அப்பொழுது எடுத்த புகைப் படங்கள் இவ் விருவர்களும் ஸ்காட்லாண்டு தேசத்துக் குழந்தைகளைப்போல் தென்பட்டார்களாம். விக்டோரியா ராணியார் பால்மோரல் அரமனையைச் சுற்றி சவாரி செய்யும்பொழுது தமது பாட்டியாருடன் ஜார்ஜ் சிறிதும் பயமின்றி சவாரிபோவார். ஏனெனில் விக்டோரியா ராணியாருக்கு ஜார்ஜ்யிடத்தில் மிகப்பிரியம்.

இவ்விரு அரசகுமாரர்களுக்கு ஒரு தோழனிருந்தான். அவன் இவர்களுடன் விளையாடுவான். ஒரு சமயம் இவர்கள் ஒளிந்திருப்பவனைக் கண்டு பிடிக்கும் ஆட்டத்தை ஆடினார்கள். அப்பொழுது ஜார்ஜ் அந்நண்பனால் கண்டுபிடிக்கப்படவே, வருத்தப்பட்டு, "நீ என்னுடன் கைக்குத்துச் சண்டை விளையாட வருகிறாயா" வென்று கேட்டார். உடனே அவன் சம்மதிக்கவே இருவரும் குத்துச் சண்டைப் போட்டார்கள். ஜார்ஜ் தன் நண்பனை ஒரு குத்து குத்தினார்.

அதனால் அவன் வருத்தமடையாமல் இருவரும் அதிக சிநேக பான்மையோடிருந்தார்கள். அந்நண்பர் இப்பொழுது ஒரு பிரபுவாக லார்ட் சபையிலிருக்கிறாராம். ஜார்ஜு அரசருக்கு குத்துச்சண்டையில் மிகப்பிரியம். இதற்காக தமது கைகளுக்குப் போட்டுக்கொள்ள கையுறைகள் வைத்திருக்கிறாராம். சிறிய கப்பலோட்டிகளுக்கு இவ்வாட்டம் தான் அதிக உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாம். ஜார்ஜ் அரசர் இவ்வாட்டத்தில் தம்மேல் குத்துவிழாமல் தடுத்துக்கொள்வதில் கைதேர்ந்தவராம்.

இவ்விரு குமாரர்கள் பொழுதுபோக்காக வெளியில் அதிகம் விளையாடினபோதிலும், இவர்கள் பெற்றோர்கள் இவர்கள் பாடங்களைக் கவனமாய் கவனித்து வரும்படி வற்புறுத்தி வந்தார்கள். ஜார்ஜ் சுவிட்சர் லண்டில் ஆறு மாதகாலமிருந்தார். அப்பொழுது பிரன்ச் பாஷையை மான்ஷியர் மேரியட், மான்ஷியர் ஹவா என்பவர்கள் மூலமாய் பேச கற்றுக்கொண்டு அப்பாஷையில் தாராளமாகப் பேசுபவரானார். சித்திரம வரைதலையும், கணிதமும் கற்றுக்கொண்டார். இவர் துரிதமாக கற்றுக்கொள்பவரல்ல. ஆயினும் ஆடம்பரம் செய்தார். பிடிவாதமுள்ளவர் ஜார்ஜ். கடைசியில் பிடிவாதம் லாபத்தை யளித்தது. இந்த குணம் இவர் கப்பல் ஓட்டும் பரிக்ஷையிற்றேறுவதில் நன்மையாக முடிந்தது.

ஜார்ஜுக்கு 12-வது வயது முடிவானதும் கப்பல் வேலைக்குப்போனார். அதாவது 1877-ளு ஜுன்மீ 5வ தனது சகோதரனுடன் டார்ட் மௌத்தில் பிரிடானியா கப்பலில் சேர்ந்தார். இங்கு அநேக வாலிபர்கள் வேலைகள் செய்து வந்தார்கள். இவ்விரு இராஜகுமாரர்களும் வித்தியாசமின்றி அவர்களுடன் சேர்ந்து வேலைசெய்தும், முக்யமானவைகளை யெல்லாம் அறிந்துகொண்டும் வந்தார்கள். விக்டோரியா ராணியாரின் பேரப்பிள்ளைகளுடன் 150 வாலிபர்கள் கப்பல் ஓட்டும் வேலையில் பழகி வந்தார்கள். இவ்விரு அரசகுமாரர்கள் செய்யும் வேலைகளில் குறையென்பதே யில்லாம லிருப்பதை இதர வேலைக்காரர்கள் கண்டார்கள். அவர்களுக்கு இது அதிசயமாகத் தோன்றுவது சகஜமே. ஏனெனில் ஏழையாகிய அவர்கள் கடின வேலைகளைச் செய்வதுபோல் அரசகுமாரர்களும் செய்து வருவது ஆச்சரியத்தை யுண்டாக்குமல்லவா? இப்பொழுதும் நமது சக்ரவர்த்தி தாம் முன் வேலைசெய்த இந்த இடத்தை சந்தோஷத்துடன் நினைத்து வருகிறாராம். தாம் கப்பல் ஓட்டும் பழக்கத்தை அடைந்ததுபோல் தமது குமாரர்களும் அவ்வித பயிற்சையைப் பெறவேண்டுமென்று அவர்களை யனுப்பினார்களாம். இரண்டாவது வருஷத்தில் இவ்விரு ராஜகுமாரர்களுடைய பெற்றோர்கள் இங்கு வந்து தங்கள் குழந்தைகளைக் கண்டு களித்து வெகுமதி யளித்தார்கள். பின்பு தங்கள் புத்திரர்களுடைய நண்பர்களைக் கண்டு அறிமுகம் செய்து கொண்டார்களாம்.

☞ பத்திராதிபர்.

தர்பார் கொண்டாட்டம். மகாராஜவின் விளம்பரம்.
இந்தியா கவர்ன்மெண்ட் உத்தரவு.

டெல்லி முடிசூட்டு தர்பார் வெளியூர்களில் கொண்டாடப்படவேண்டிய மாதிரியைப்பற்றி இந்தியாக் கவான்மெண்டார் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பம்பாயிலும் கல்கட்டாவிலும் தர்பார் கொண்டாட்டம் மகாராஜா சக்கரவர்த்தி அவ்வூர்களுக்கு விஜயம் செய்யும் போது கொண்டாடப்படும். மகாராஜா சக்கரவர்த்தி ராஜ கோலத்துடன் டெல்லி நகருக்குள் விஜயஞ் செய்யும் தினமாகிய டிசம்பர் மாதம் 7-ந் தேதி யன்றும் தர்பார் தினமாகிய அந்த மாதம் 12-ந் தேதி யன்றும் விடுமுறை தினங்களாகும். இந்த இரண்டு தினங்களைத் தவிர மாகாணக் கவர்ன்மெண்டுகள் அவசர ஆபீஸ் வேலைகளுக்கு யாதொரு குந்தகமும் நேரிடாதிருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு டிசம்பர்மாதம் 8-ந் தேதிமுதல் 11-ந்தேதிவரை ரஜா விடலாம். இந்தியா கவர்ன்மெண்ட் ஆபீஸ்களும் அவசர வேலைகள் நடப்பதற்குச் சரியான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அந்த தினங்களில் விடுமுறை அனுபவிக்கும். தர்பார் தினத்தன்று மத்தியானம் மகாராஜா சக்கரவர்த்தியின் விளம்பரம் தர்பார் மண்டபத்தில் படிக்கப்படும். அதே சமயத்தில் வெளியூர்களில் அந்த விளம்பரம் கவர்ன்மெண்ட் தலைமை ஸ்தானங்களிலும் ஜில்லா தலைமை ஸ்தானங்களிலும்டிவிஷன், தாலூகா, தலைமை ஸ்தானங்களிலும், கிராமங்களிலும் ஆங்கிலத்திலும், தேச பாஷையிலும் படிக்கப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாகாண கவர்ன்மெண்டுகள் செய்யவேண்டும். தாலூகாக்களிலும் கிராமங்களிலும் மகாராஜா சக்கரவர்த்தியின் விளம்பரம் தேச

பாஷையில் வாசிக்கப்படும். கிராமங்களில் அதனை தாசில்தாரால் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமத்தலைவர் வாசிப்பார். விளம்பரத்தை வாசிப்பவர்கள் மகாராஜா சக்கரவர்த்தியின் உருவப்பட மொன்றை சகல ஜனங்களும் பார்த்து ஆனந்திக்கும்படி காட்டுவார்கள். கூடுமானவரையில் தலைமைஸ்தானங்களில் ஒரு தர்பார் நடத்தப்பட்டே விளம்பரம் வாசிக்கப்பட வேண்டும். அச்சமயம் யாருக்காவது கௌரவப்பட்டங்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அவைகள் குறிப்பிடப்படும். யாருக்காவது மாகாணக் கவர்ன்மெண்டுகள் கௌரவ சர்டிபிகேட்டுகள் கொடுப்பதா யிருந்தாலும் கொடுக்கலாம். மகாராஜா சக்ரவர்த்தியின் விளம்பரம் வாசிக்கப்படும்போது, 101-குண்டுகள் சௌகரியப்படுமிடங்களில் போடப்படும். டிசம்பர்மீ 12-ந் தேதி சாயங்காலம் சர்க்கார் ஆபீஸ்களும் கட்டிடங்களும் தீபாலங்காரம் செய்யப்படும். பொதுஜனங்களும் அன்று சாயங்காலம் தங்கள் வீடுகளையும் ஆபீஸ்களையும் தீபாலங்காரஞ் செய்வார்களென்று நம்பப்படுகிறது. அன்று ஏழைகளுக்குக் கஞ்சிவார்த்தல், பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்குதல், தேகாப்பியாசவிளையாட்டுகள் நடத்தல், வாணவேடிக்கைகள் நடத்தல், இவைகளும் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாராஜா சக்ரவர்த்தியின் விஜயம்.

டெல்லி தர்பார் சம்பந்தமான முக்கிய ஏற்பாடுகளுக்கு மகாராஜா சக்கரவர்த்தி சம்மதி கொடுத்திருக்கும் ஆக்ஞாபத்திரம் எட்டிவிட்டபடியால் மகாராஜா சக்கரவர்த்தி டெல்லிக்கு விஜயம்செய்வது சம்பந்தமான விவரங்களைச் சுருக்கமாய் வெளியிடுதல் சாத்தியமாகிறதென்று சொல்லிக்கொண்டு அவ்விஜய விவரங்களை தர்பார் கமிட்டியார் வெளியிட்டிருக்கிறார்கள். அவ்விவரங்கள் அடங்கிய குறிப்புகளின்படி மகாராஜா சக்கரவர்த்தியும் மேரி சக்கிரவர்த்தினியும் டெல்லிக்கு டிசம்பர் மாதம் 7-ந்தேதி விஜயஞ்செய்து அந்தமாதம் 16-ந்தேதிவரை அவ்வூரில் தாமதிக்கிறார்கள். அவர்கள் வருவதற்கு 2-நாள் முன்னதாக ராஜப்பிரதிநிதி டெல்லிக்கு வந்து அவர்கள் புறப்பட்டுப்போய் 2-நாள்கழித்து அவ்வூரை விட்டுப்போவார். மகாராஜா சக்கரவர்த்தி டிசம்பர் மாதம் 7-ந்தேதியன்றும் 8-ந்தேதி காலையிலும் 9-ந்தேதி காலையிலும் இந்தநாட்டில் அரசுசெலுத்தும் முக்கிய தேசமன்னர்களுக்கு பேட்டிகொடுப்பார். 8-ந்தேதி சாயங்காலம் எல்லா இந்திய எட்வர்ட் ஞாபக சின்னத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவார். 11-ந்தேதி திங்கட்கிழமையன்று மகாராஜா சக்கரவர்த்தி 5 ரெஜிமெண்டுகளுக்கு கொடிகள் கொடுப்பார். 12-ந் தேதி தர்பார் நடக்கும். 14-ந்தேதி படைக்காட்சி நடக்கும்.

ஸ்ரீமதி அலர்மேலு மங்கையம்மை செய்த பிரசங்கம்.

"ஆடவர்களைப்போலவே பெண்களும் படிக்கவேண்டும். தனிகர்வீட்டுப் பெண்கள் எவ்வளவு படித்திருந்தபோதிலும் தங்களிலும் தாழ்ந்த எளிய பெண்களிடத்தில் சேர்ந்து பாரமார்த்திக தர்மத்தைப்போதிப்பதும் தனசகாயம் செய்வதுமில்லை. அப்படிப்பொதுநல உழைப்பை உழைக்க ஆடவர் விடுகிறதில்லை. வடநாட்டுப்பெண்களை ஒப்பிட்டுப்பார்க்கின் நம் ஸ்திரீகள் எவ்வளவோ தாழ்ந்த நிலைமையி லிருக்கிறார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். ஆந்திரதேசத்து மாதர்களும் கான்பரென்ஸ், சமாஜம்போன்ற சபைகளை ஏற்படுத்திக்கொண்டு விருத்திக்கு வரவில்லையா?

சிலர்படித்தால் மேல்நாட்டு ஸ்திரீகளைப்போல விருக்கப்பிரியப்படுகிறார்கள். தலை சீவி முடித்தலையும் உடுப்புகளையும் மாற்றுகிறார்கள். அப்படி மாற்றிக் கொள்ள விருப்பமுறுவது தாயின் கவனக்குறைவேயாகும்.

கன்னடதேசத்துப் பெண்மணி அக்கமாம்பாள் உயர்தர படிப்பைப் பெற்றிருந்ததினா லல்லவா சைவசமயத்தைப் போதிக்கும் திறன்வாய்க்கப் பெற்றனர்? தன்னை மணக்கும்படி வேண்டிக்கொண்ட ஓர் அரசனையும் மறுத்துத் தான் ஒரு அரசியாக விருப்பதைப்பார்க்கிலும் சன்னியாசியாகவிருந்து தேசத்துக்கு நற்காரியம் செய்வதுமேலென்று நினைத்து, தன்னுடைய ஆயுள் முழுவதையும் அர்ப்பணம் செய்தார். இம்மட்டோ! மீராபாயின் பக்தியை யார்தான் அறியார்? வங்கதேசத்தில் ஸ்ரீமதி சாரளாதேவி சௌத்ராணி என்னும்மாது பாரத மஹிலபரிஷத் என்னும் சபையை ஸ்தாபித்து பெண்கள் தங்களைத் தாங்கள் சீர்திருத்திக்கொள்ள வில்லையா? நம் தமிழ் தேசத்தில் மாத்திரம் ஏன் அப்படிச்செய்யக்கூடாது? நம் தேசத்துச் சகோதரிகள் மாத்திரம் முன்னுக்கு வரக்கூடாதா? சிறுமிகளுக்குப் பாலிய விவாகம் செய்து கண்குளிரப் பார்க்கவேண்டுமே என்ற ஆசையினால் கலியாணம் செய்வித்துப் படிப்பைபெற்றோர்கள் நிறுத்திவிடுவது சரியன்று. விதவைச் சிறுமியரை நம் நாட்டினர் ஆதரிப்பதில்லை. எல்லாத்தேசங்களிலும் மாதர்கள் முன்னுக்கு வந்துகொண்டிருக்க, நம்தேசத்தில் மாத்திரம் படிப்பில்லாமலும் பொதுநல உழைப்பைக்கோராமலு மிருப்பது சரியா? கணவனுக்கு அனுகூலமாய் வரவுக்குத்தக்க செலவுசெய்துகொண்டும் பிள்ளைகளுக்குச் சன்மார்க்க நெறியைப் போதித்துக்கொண்டும் வரும்பக்ஷத்தில் என்ன கெடுதி சம்பவிக்கும்? சிலபெண்கள் சமையல் தொழிலைக் கற்றுக்கொள்ளாமல் எப்போதும் ஆட்களையேவைத்துச் சமையல் செய்யச்சொல்கிறார்கள். அவற்றைச் சிறுவயதில் தாயார் கற்றுக்கொடுத்திருந்தால் இப்படி நேருமா?"

சமாச்சாரக்குறிப்பு.

ஹைதராபாத்து நகரத்து நிஜாம் அரசர் ஆகஸ்டுமீ 29உ இறந்துபோனாரென்று அறிந்து மிகவும் துக்கப்படுகிறோம். இவர் முந்தின தினத்தில் திடீரென்று வியாதியாகி ஞாபகம் தப்பிப்போகக் குணப்படாமல் நேற்று 12-30 மணிக்கு இறந்துபோய் விட்டார். ரெஸிடென்ஸி ஸர்ஜியன் கர்னல் டிரேக் பிராக்மனும் மற்ற வைத்தியர்களும் பார்த்தார்கள்.

மைசூர் கவர்ன்மெண்டார் மகமதியப் பெண்களுடையவும் விதவைப் பெண்களுடையவும் படிப்பைக் குறித்து எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகவும் புகழத்தக்கது. கம்பஸ் நிதியிலிருந்து கவர்ன்மெண்டார் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 பிரத்தியேகமாக வைத்து, தேசபாஷை கற்கும் 4-வது வகுப்புப் பெண்களுக்கு மாதம் ஒன்று 2-ரூபாயும், 5-வது வகுப்புப் பெண்களுக்கு—3-ரூபாயும் கொடுக்கிறதென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஸ்காலர்ஷிப்புகளைப் பெற்றிருக்கும் பெண்கள் ஒழுங்கற்றுப் பள்ளிக்கு வந்தாலும், படிப்பில் ஊக்கம் காட்டாதுபோனாலும், கெட்ட நடத்தையாயிருந்தாலும், அந்தப் பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டரோ, அல்லது ஹெட்மிஸ்டிரஸோ ஸ்காலர் ஷிப்பை குறைத்துவிடவோ அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.